Registered as a Newspaper in Sri Lanka   பக்கங்கள் 08   விலை ரூபா 5.50

# ஈழநாதம்

THE EELANAATHAM Weekly வெள்ளி மஞ்சரி

நாதம்: 02   ஏப்ரல்   (12 - 04 - 1991)   வெள்ளிக்கிழமை   ஓசை: 53

## மனைவியர் கொடுமை; கணவன்மார் ஊர்வலம்

(டாக்கா)

அண்மையில் பங்களாதேஷில் பல ஆண்கள் தமது மனைவிமார் தம்மைக் கொடுமைப் படுத்துவதாக அரச அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளனர். தங்களுக்கு பாதுகாப்பு அளிக்கும்படி கோரியுள்ள இவர்கள் ஆண்களுக்கு எதிரான அடக்குமுறையை கண்டித்து ஊர்வலம் ஒன்றையும் (8 ஆம் பக்கம் பார்க்க)

## குர்திஷ் அகதிகள் விடயத்தில்

# ஈராக் ராணுவம் குறுக்கிட்டால்

# கடும் நடவடிக்கை

## அமெரிக்கா எச்சரிக்கை

(வாஷிங்டன்)

குர்திஷ் அகதிகள் விவகாரம் ஒரு மனிதாபிமானப் பிரச்சினை. இதில் தலையிட வேண்டாமென ஈராக்கை அமெரிக்கா எச்சரித்துள்ளது. இந்த எச்சரிக்கையையும்மீறி ஈராக் தலையீடு செய்யுமேயானால் அமெரிக்கா கடும் நடவடிக்கைகளை எடுக்கும் எனவும் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் ஈராக் அதிபர் சதாம் ஹுசைனை எச்சரித்துள்ளார்.

குர்திஷ் மக்கள் மீது கை வைக்காதீர் எனப் பொருள்படும் வகையில் வெள்ளை மாளிகை ஈராக்கை எச்சரித்துள்ளது. அமெரிக்காவும், பிரிட்டனும், பிரான்சும், குர்திஷ் அகதிகளுக்கு விமான மூலமும், தரை மார்க்கமாகவும் உணவுப் பொருள்களை விநியோகம் செய்து வருகின்றன. இராணுவ அச்சுறுத்தல் இன்றி நிவாரணப் பணிகள் தொடர்வதற்கு வசதியாக வான்வழியாகவோ, தரைவழியாகவோ, அகதிகள் மீது தாக்குதல் நடத்த வேண்டாமென ஈராக் எச்சரிக்கைசெய்யப்பட்டதாக வெள்ளைமாளிகைப் பேச்சாளர் கூறினார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. நா. அமைதிப்படைக்கு ஆஸ்திரியாதலைமைஏற்கும்

(நியூயோர்க்)

ஈராக்கிலும் குவைத்திலும் நிறுத்தப்படவிருக்கும் ஐ. நா. அமைதிகாக்கும் படைக்கு ஆஸ்திரியாவின் மேஜர் ஜெனரல் கக்கிரண்டல் தலைமை இராணுவ பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### மன்னாரில் மூவர்

(மன்னார்)

மாந்தையில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் மூன்று புலிகள் வீரமரணமடைந்தனர். லெப்டினட் துரைக்குட்டி, நாயகன், விஜயன் ஆகியோரே வீரமரணமடைந்த புலிகளாகும்.

### காரைநகரில் இருவர்

காரைநகர் கடற்படை முகாமிலிருந்து நேற்று முன்தினம் இராணுவத்தினர் முன்னேறி வந்தபோது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட எதிர் தாக்குதலில் குட்டி (செல்லப்பா இராஜேந்திரன் - புத்தூர்) ரகுராம் (பழனிவேல் நந்தகுமாரன் - அராலி வடக்கு) ஆகிய இரண்டு போராளிகள் வீரமரணம் அடைந்தனர்.

இவர்கள் அனைவருக்கும் விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

### ஈராக்கினுள் துருக்கி இராணுவம்

(அங்காரா)

துருக்கிய இராணுவத்தினர் நேற்று முன்தினம் ஈராக்கிய எல்லையைத் தாண்டி வடபகுதிக்குள் நுழைந்துள்ளனர் என்று உறுதிப்படுகிறது.

எல்லையை பாதுகாப்பதற்காகவே துருக்கிய ராணுவம் வடபகுதிக்குள் நுழைந்ததாக துருக்கிய அரசாங்க அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

### இன்று பொது அறிவுப் போட்டி

விடுதலைப்புலிகள்மாணவர் இயக்கம் நடாத்தும் அன்னை பூபதி ஞாபகார்த்த பொது அறிவுப் போட்டிக்கான பரீட்சை இன்று நடைபெறும். சுமார் 17 000 மாணவர்கள் பங்குபற்றவுள்ள இப்பரீட்சைகள் காலையும், மாலையுமாக இரு நேரம் நடைபெறும்.

### சிறிலங்கா தேசிய விளையாட்டாக கரப்பந்தாட்டம்

(கொழும்பு)

சிறிலங்காவின் தேசிய விளையாட்டாக கரப்பந்தாட்டத்தை இளைஞர் விவகார

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மாந்தை நானாட்டான் பகுதிகளில் ராணுவத்துடன் தொடர்ந்து மோதல்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள மாந்தை, நானாட்டான் பகுதிகளில் கடுமையான சண்டைகள் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்துக்கும் இடையில் இடம்பெற்றுள்ளது.

எமக்குக் கிடைத்துள்ள செய்திகளின்படி நேற்று முன்தினம் நண்பகல் பன்னிரெண்டு மணியளவில் மாந்தையில் தரித்துநின்ற இராணுவத்தினர் இரண்டு குண்டுவீச்சு விமானங்களின் ஒரு அவ்ரோ விமானம் ஒரு உலங்கு வானூர்தி ஆகியவற்றின் கடுமையான தாக்குதல்நடாத்திய வண்ணம் அடம்பனை நோக்கி முன்னேற முனைந்தனர். இந்த முயற்சிக்கு மூன்று பவல்ரக வாகனமும் இரண்டு கமட் கார்களும் ஒரு சரக்குவண்டியும் பயன்படுத்தப்பட்டன.

இச்சமயம் விடுதலைப் புலிகள் கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மேற்கத்தைய நிவாரணம்

## பொட்டலங்கள் விழுந்து 17 குர்திஷ் மக்கள் பலி

(லண்டன்)

மேற்குலக நாடுகளின் உணவுப் பொட்டலங்கள் விழுந்து 17 குர்திஷ் இன மக்கள் உயிரிழந்தனர் என பி. பி. ஸி. நேற்று அறிவித்தது.

நேற்று முன்தினம் ஈராக்கின் வடபகுதி மலையோரத்தில் உள்ள குர்திஷ் இன அகதி மக்களுக்கு விமானமூலம் உணவு போடப்பட்டபோது உணவுப் பொட்டலம் அகதிகள் மீது விழுந்து 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

## சட்டசபைத் தேர்தலில் தி. மு. க. 175 இடங்களில்

(சென்னை)

தமிழ்நாடு சட்டப் பேரவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் சுமார் 175 இடங்களில் போட்டியிடும் என்று அதன் தலைவர் மு. கருணாநிதி நேற்றுச் சென்னையில் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

ஜனதாதள், மார்க்சியக்கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சி, அ. இ. அ. தி. மு. கழகத்திலிருந்து பிரிந்து சென்ற திருநாவுக்கரசு அணிகளுடன் தொகுதி உடன்பாடு பற்றிய பேச்சுவார்த்தை இன்று முடிவுக்கு வரும் என்று கருணாநிதி தெரிவித்தார்.

ஜனதாதளக் கட்சியுடனான தொகுதி உடன்பாடு பற்றிச் சென்னையிலேயே முடிவு எடுக்கப்படும் என்றும், டில்லி சென்று பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்ற அவசியம் இருக்காது என்றும் அவர் கூறியுள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலில் ஜனதா தளம் 10 இடங்களில் போட்டியிட்டது, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 21 இடங்களில் போட்டியிட்டது என்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அனுராதபுர குளங்கள் புனரமைக்க

## ஜான் ஓயாவிற்கு குறுக்கே அணைக்கட்டு

(கொழும்பு)

அனுராதபுர மாவட்டத்திலுள்ள மூன்று புராதன குளங்களைப் புனரமைப்பதற்காக ஜான்ஓயாவிற்குக் குறுக்கே அணைக்கட்டு ஒன்றை கட்டும் திட்டத்தின் சாத்தியக்கூறு பற்றி ஆராயுமாறு சிறிலங்கா ஜனாதிபதி பணித்துள்ளார். நிவம்பல கஸ்வெவ, எலபொத்தான, வல்கஸ்ஓயா ஆகிய குளங்களைப் புனரமைப்பதற்காக இவ் அணைக்கட்டு நிர்மாணிக்கப்படவுள்ளது. அநுராதபுரத்தில் இடம்பெற்ற

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பிரச்சினைகளை அறிய குழு நியமனம்

(கொழும்பு)

இலங்கை எதிர்நோக்கும் பிரச்சினை சம்பந்தமாக அறிக்கையொன்றினை சமர்ப்பிக்கச் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கலாநிதி காமினி கொரியா தலைமையிலான குழு ஒன்றை நியமித்துள்ளார்.

இலங்கை உலகளாவிய ரீதியில் எதிர்நோக்கு பிரச்சினை குறித்து ஆராய்ந்து அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பிக்கும்படி இவர்களிடம் கேட்கப்பட்டிருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இடம் பெயர்ந்தோர்களுக்கு சுழற்சிமுறையில் நிவாரணம்

(நமது நிருபர்)

இராணுவ முகாம்களை அண்மித்த பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கான அரச சார்பற்ற நிறுவனங்களின் நிவாரண உதவிகளை சுழற்சி முறையில் கிராமசேவகர் பிரிவு ரீதியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தெரிவித்துள்ளது.

முதற்கட்டமாக தென் இந்திய திருச்சபை பளைமுகாம் பகுதிகளான மயிலிட்டிதெற்கு ஜ/248, மயிலிட்டி வடக்கு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சைக்கிள் பறிகொடுத்தோர் நாளை தொடர்பு கொள்க

யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் கைது செய்யப்பட்ட சைக்கிள் திருடர்களிடமிருந்து பெறப்பட்ட சுமார் பத்து சைக்கிள்கள் நாளை காலை கோண்டாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி காரியாலயத்தில் வைத்து உரியவர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளனபோது இடங்களில் சைக்கிள்களை பறிகொடுத்தவர்கள் வந்து தத்தமது சைக்கிள்களை தகுந்த ஆதாரங்களுடன் அடையாளங்காட்டி பெற்றுச் செல்லலாம்.

## வரிவிளம்பரம்

**பழைய புத்தக விற்பனை நிலையம்**

பழைய புத்தகங்கள், கொப்பிகள் பேப்பர் போத்தல் செம்பு பித்தளை கோழித்தீன் சீமெந்து உறைகள் கூரப்பைகள் வாங்கப்படும், விற்கப்படும். சேனாதிராசா பழைய புத்தக விற்பனை நிலையம், 57 ஸ்ரான்லி றோட், (இலங்கை வங்கி முன் லேன்) யாழ்ப்பாணம்.

(B 2301)

**வாங்கப்படும்**

கால், அரை முகசால் போத்தல் அளவு திரவம் கொள்ளக் கூடியதுமான போத்தல்கள். மில்க்வைற்.

(B-2346)


### விழுதுகள்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

யல் வேலைகளுக்காக நியமிக்கப்பட்டான்.

கல்முனைப் பிரதேசத்திற்கு செல்வதற்கு முன் தனது சொந்த வீட்டிற்குச் சென்றான் இவன். பிரதான ஆயுதப்படை முகாமிற்கு அண்மையில இவனது வீடு உள்ளது. நாளாந்தம் எத்தனை நிகழ்வுகளை இவனது தாய் கண்டிருப்பாள்? அந்த நிலை தனது மகனுக்கு நேர்ந்தால்... தாயுள்ளம் பதறியது. தனது மடியில் படுத்திருந்த மகனிடம் "உனது போக்கை மாற்றிக்கொள். எல்லோருமாக வெளிநாடு சென்று விடுவோம்" என்று கேட்டாள். அவ்வளவுதான் கண் கலங்கியபடியே தாயிடம் விடைபெற்றான உமாராம். "எனக்கும்வாழத்தான் ஆசை, இந்தப் போராட்டம் வாழ்வதற்கான போராட்டம்தான். உங்கள் நிலையில் நீங்கள் சொல்வதை பிழையென நான்சொல்லவில்லை. ஆனால் நான் போராடித்தான் ஆகவேண்டும் இது இந்த மண்ணின் தேவை" என்று தாயிடம் விடைபெற்றான்.

அதுதான் இறுதிச் சந்திப்பு என்பதை இருவரும் ஆத்மார்த்தமாக உணர்ந்ததாலோ என்னவோ அந்தச் சந்திப்பு மிகவும் உணர்வு பூர்வமாக இருந்ததாக அச்சந்திப்பைப் பற்றி தனது நண்பர்களிடம் கூறிக் கொண்டான் உமாராம்.

12.3.86 அன்று காலை விடிந்தது அன்று தமிழீழ விடுதலைப்போராட்டத்தின தியாகங்களுக்கு இன்னுமொரு வடிவம் பிறக்கப்போகிறது என்பதை எவரும் அறிந்திருக்கவில்லை. காரைதீவுக்குச் செல்லவிருக்கும் சில போராளிகளுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்காக உமாராமும் அவனது நண்பனும் சென்றுகொண்டிருந்தனர். தமிழர் எல்லோருமே சோதனைக்குரியவர்கள்தானே. பிரதான வீதியால்வந்த அரசபடை இவர்களை வழிமறித்தது. உமாராமின் தோற்றம் அவனை விடுவித்தாலும்இவனதுதோழனின் வயது அவர்களைச் சந்தேகிக்க வைத்தது முடிவு.. படை முகாம்களுக்கு கைதிகளாக செல்ல இருவருமே விரும்பவில்லை ஒரேசயனைட்டை இரு புலிகள் உள்கொண்டு புதியதொரு தியாக வரலாறு படைத்தார்கள் என்று சரித்திரத்தில் ஒரு அத்தியாயம் எழுதப்பட்டது; அதேவேளை சயனைட் உட்கொண்ட ஒருவன் மீது குறிபார்த்து தமது திறமையை மெச்சிக்கொண்டார்கள் சிறிலங்கா அரச படையினர். பிரியத்தின்காரணமாய் உமாராம் என்று காரணப்பெயர் வைத்துக்கொண்ட இவனது உடல் கல்முனை மண்ணில் விடுதலையின் தேவையை உணர்த்தியபடி நீட்டிநிமிர்ந்து...


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

## பொதுப்பட்டமளிப்பு 1990

டிப்ளோமாக்கள் / பட்டங்கள் / பட்டப்படிப்பின் டிப்ளோமாக்கள் / முதுமாணி / கலாநிதி ஆகிய பட்டங்களை அளிப்பதற்காக 1991 ஆடி மாதம் ஆறாம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொதுப் பட்டமளிப்பு நடைபெறும். பின்வரும் தேர்வுகளில் சித்தியடைந்தோர் 1991 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் தமது வேண்டுகோளை விடுத்தல் வேண்டும்.

1. கலாநிதித் தேர்வு
2. முது தத்துவமாணித் தேர்வு
3. முது கலைமாணித் தேர்வு
4. முதுவிஞ்ஞானமாணித் தேர்வு
5. கல்விப்பட்டப்படிப்பின் டிப்ளோமாத்தேர்வு 1989
6. வைத்தியமாணி, சத்திரசிகிச்சைமாணித் தேர்வு 1989/1990
7. பொதுக்கலைமாணித் தேர்வு 1989
8. பொதுவிஞ்ஞானமாணித்தேர்வு 1989
9. சங்கீதம்/பரதநாட்டியம் டிப்ளோமாத்தேர்வு 1989
10. சிறப்பு விஞ்ஞானமாணித் தேர்வு 1989
11. வணிகமாணித் தேர்வு 1989
12. தொழில் நிர்வாகமாணித் தேர்வு 1989
13. சிறப்பு கலைமாணித் தேர்வு 1988
14. சித்தவைத்தியமாணி, சத்திர சிகிச்சைமாணித் தேர்வு

விண்ணப்பங்களை மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். வேண்டுகோள் படிவங்களையும் மற்றும் விபரங்களையும் முத்திரை ஒட்டிய 23 × 10 செ. மீற்றர் அளவுடைய, சுயமுகவரியிட்ட கடிதஉறையை உப பதிவாளர்/தேர்வுகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பியோ அல்லது வழமையான வேலை நேரங்களில் தேர்வுக் கிளைக்கு நேரடியாக வந்தோ பெற்றுக் கொள்ளலாம். குறிப்பிட்ட திகதிக்கு கிடைக்கப்பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

- பதிவாளர்

(B - 2358)


## 2-ம் ஆண்டு நினைவு அஞ்சலி



ஆண்டவன் படைப்பு

14. 5. 1970

சந்நியன் அழிப்பு

12. 4. 1989

**சுப்பிரமணியம் (இராமுப்பிள்ளை) திருநாவுக்கரசு (கண்ணன் ஜெமினி)**

ஈராண்டு கழிந்தாலும் எமதுள் ளம்தின்
இன்முகமும் இன்சொல்லும் மறவாதையா
சீரான சிந்தைநிறை இருவின் செல்வா
திருநாவுக் கரசென்னும் ஜெமினி - கண்ணா
பாரான வேண்டுமெனும் ஆசை யாலே
பயமின்றி உயிர்ஈந்த பண்பின் வீரா
வாராயோ என் றென்றே வருந்தும் நாம் மேல்
வானுலகு சென்றவுனை வாழ்த்து வோமே!

'கோண்டாவில்' — உனது பிரிவால் வருந்தும் குடும்பத்தினர்.

(B/2354)

## நினைவு கூருகின்றோம்

1991 - 04 - 12



கப்டன் **சண்முகம்** (முத்துக்குமாரு சண்முகராசா - அரியாலை)



2ஆம் லெப். **சின்னச்சுதா/அகிலன்** (கதிர்காமநாதன் சுதாகரன் - கொழும்புத்துறை)



வீரவேங்கை **ஜெனா** (சத்துருகுலசிங்கம் சிவராசா - வரணி வடக்கு)



**கவிச்சந்திரன்** (அரியாலை)

1989ஆம் ஆண்டு இதே தினத்தில் இரணைஇலுப்பைக்குளம் பகுதியில் இந்தியப்படையினரின் வாகன அணியொன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலொன்றில் வீரமரணமடைந்த

**கப்டன் சண்முகம்** (முத்துக்குமாரு சண்முகராசா - அரியாலை)

**2ஆம்லெப்.சின்னச்சுதா/அகிலன்** (கதிர்காமநாதன் சுதாகரன் - கொழும்புத்துறை)

இதே ஆண்டு கச்சாயில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து தாக்கிய போது சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த

**ஜெனா** (சத்துருகுலசிங்கம் சிவராசா- வரணிவடக்கு)

இதே ஆண்டு காந்தனில் இந்தியப்படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த

**கண்ணன்/ஜெமினி** (சுப்பிரமணியம் திருநாவுக்கரசு - கோண்டாவில் மேற்கு)

இதேஆண்டு தேசவிரோத சக்திகளாலும் இந்தியப் படையினராலும் சுடடுக் கொல்லப்பட்ட எமது தீவிர ஆதரவாளரான

**சபாபதிப்பிள்ளை கவிச்சந்திரன்** (அரியாலை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/2341)


# ஈழநாதம்

## வெள்ளி மஞ்சரி

"சுதந்திர தாய்நாட்டைப் பெற ஒவ்வொரு தாயும் பாராடுகிறாள் மலரும் தமிழீழத்தில் நம குழந்தைகள் தனி தாய் வாழப்போகின்றன.

-அன்னை பூபதி







இவன்!
விடியலைத் தேடும் விழிகளுக்கு
சொந்தக்காரன்!
ஆற்றல் மிகும் கரங்களிலே
ஆயுதம் ஏந்தி
மாற்றம் ஏற்படுத்தும் பாதையிலே
இவன் பாதங்கள் பயணம்!
புதர்களுக்கு இடையில்
பிறப்பெடுத்த பூகம்பம்!
தென்றலாய் உருளவும் தெரிந்திருக்கும்
சூறாவளிக் காற்று!
இவன் வாழ்வு தான்
இந்த மண்ணின் உயிர்மூச்சு!!

- இளையவன்




அழகில் இயற்கையன்னையின் கருணை கொஞ்சம் அதிகமாகவே உள்ள இடம் மட்டக்களப்பு மாவட்டம். இம்மாவட்டம் அசேயளவு சூறாவளி அபாயத்தையும் கொண்டது. இங்கு மீனின இசையால் அறிமுகப்படுத்தப்படும் இடம் கல்லடிப்பாலம் கல்லடியிலிருந்து முகத்துவாரம் வரையுள்ள மக்கள் இரவு நேரங்களில் வெளிச்சங்களுடன் இறால் பிடிப்பதற்காக இடுப்பளவு தண்ணீரில் நிற்பார்கள். கல்லடிப்பாலத்திலிருந்து பார்த்தால் இவ்வெளிச்சங்களின் அழகு ஒரு களியாட்ட விழாவை நினைவுபடுத்தும். ஆற்றில் அசைந்து வரும் தோணிகள்: மீன்களை ஒருங்கே சேர்ப்பதற்காக தமது தோணிகளில் தாளலயத்தோடு தமது துடுப்பினால் அடித்து வரும் தோணிக்காரர்கள்; இவை எல்லாம் நாம் இழந்து போன நாட்களின் இனபக் காட்சிகள் இந்த இடத்தை இன்று குறிப்பிடும்போது மட்டக்களப்பு மக்களின் கண்கள் பயத்தின் அறிகுறியைக் காட்டுப. வாய் பெளனிக்கும் கரைகளில் ஒதுங்கிய சடலங்கள் கணிசமான மக்களின் இடப்பெயர்ச்சிக்குக் காரணமாக அமைந்து விட்டன. அரைவட்ட வடிவில் மட்டக்களப்பு வாவி, ஒருபக்கம் கடல். இந்த அமைப்புக்குள் மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான படைமுகாம். இந்தச் சூழலுக்குள் தான் நெடுஞ்சாலைகள் திணைக்களத்தில் தொழில் நுட்ப உதவியாளராக கடமையாற்றிய சந்திரகுமார் உமாராம் என்ற போராளியாக உருவெடுத்தான்.

விடுதலைத்தீ மட்டக்களப்பு மண்ணில் பரவி வந்த 1983 ஆம் ஆண்டுக் காலம் விடுதலை உணர்வு கொண்ட அந்த மண்ணின் மைந்தர்கள் சிலர் ஒன்று கூடி ஒரு விடுதலை இயக்கத்தை உருவாக்கினார்கள். இயக்கத்தின் தேவைக்காக மட்டக்களப்பு கச்சேரியில் வைக்கப்பட்டிருந்த துப்பாக்கிகளைக் கைப்பற்றுவது எனத் தீர்மானித்தனர். பயிர்களின் பாதுகாப்புக்காக விவசாயிகள் வைத்திருந்த இந்த ஆயுதங்களை தமது பாதுகாப்புக்காரணங்களைக் காட்டி பறிமுதல் செய்திருந்தனர் சிறிலங்கா அரச படையினர். விலங்குகளை சுட்டுத்துறுத்த வைத்திருந்த இந்த ஆயுதங்கள் தமிழ் மக்களின் அழிவுக்கென சிங்களக் குடியேற்ற வாசிகளுக்கு வழங்கப்பட்டிருந்தன எனவே இவற்றை தமிழ்த் தேசிய இனத்தின் பாதுகாப்புத் தேவைகளுக்கு உபயோகிக்கத் தீர்மானித்தனர். இந்த இளைஞர்கள். அதைப்போலவே சிறிலங்காப் படையினர் மீதான விடுதலைப் போரைத் தொடங்குவதற்கு. கண்ணிவெடி வைப்பதற்கு உதவும் ஒரு எக்ஸ்புளோடர் தேவைப்பட்டது. எனவே நெடுஞ்சாலைகள் திணைக்களத்திற்கு சொந்தமான எக்ஸ்புளோடரை தமது தேவைக்காக எடுத்துக் கொள்ளத் தீர்மானித்தனர். இந்த இரண்டு திட்டங்களுக்கும் அப்போதைய தொழில்நுட்பவியலாளன் சந்திரகுமார் தன்னாலியன்ற வகையில் ஒத்துழைத்தான்.

ஒருநாளிரவு மட்டக்களப்புக் கச்சேரியிலிருந்து துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டு தோணி மூலம் கொண்டு செல்லப்பட்டன. இவை கொண்டு செல்லப்பட வேண்டிய இடத்தை அடைவதற்குமுன் விடிந்து போனதால் தற்காலிகமாக ஆற்றங்கரையில் ஓரிடத்தில் புதைத்துவிட்டுச் சென்றனர். உயிரைப் பணயம் வைத்து பொலிஸ் நிலையத்திலிருந்து மிக அண்மையிலிருந்து கைப்பற்றப்பட்ட இந்த ஆயுதங்கள் திருட்டுப் போயின. விடுதலை இயக்கம் என்ற பெயரால் நடமாடிய புளொட் குழுவே இத்திருட்டை மேற்கொண்டது அத்துடன் அடுத்தடுத்து இவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் போராட்டத்தில் பல சோதனைகளைக் கொடுத்தன. அச்சம்பவத்தைத் தாமே மேற்கொண்டதாக இந்தியாவில் பத்திரிகைகளில் உரிமை கோரினர் அதேவேளை ஆற்றங்கரையிலிருந்து திருடப்பட்ட இந்த ஆயுதங்களைக் கொண்டு வாகனத்தில் திரிந்த சில புளொட் உறுப்பினர்கள் சிறிலங்கா பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர் "தற்கொலை செய்வதற்கு உங்களுக்கு உரிமையில்லை" யென எல்லா விடுதலை இயக்கங்களுக்கும் போதித்த இவர்கள் எல்லா இயக்கத்தையும் காட்டிக் கொடுக்கும் உரிமையை மட்டும் தாமாகவே எடுத்துக் கொண்டனர் விளைவு... சந்திரகுமாரையும் தேடி சிறிலங்கா பொலிஸ் வலைவிரித்தது. இந்த நிலைமை என்றோ ஒரு நாள் வரும் என இவனுக்குத் தெரியும். அந்த நாளில் விடுதலை போராட்டத்தின் முழுநேர உறுப்பினராக மாறத் தான் இவனும் எண்ணியிருந்தான். எனவே தனது நண்பர்களுடன் தானும் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டான்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூன்றாவது பயிற்சி முகாமில் பயிற்சிபெற்ற இவன் தமிழீழத்தில் கால்பதித்ததும் வன்னி மண் இவனை வரவேற்றது. வன்னி மண்ணில் இவன் அரசியல் வேலைக்காக நியமிக்கப்பட்டான் வன்னியின் சாலைகள் எல்லாம் இவனது துவிச்சக்கர வண்டி சென்றது. வன்னி மண்ணின் நாட்டார்களும் பாலகரும் இவனை நேசித்தனர் ஒரு இடத்தில் தொடர்பு வேண்டுமென்றால் யாராவது தன்னை அறிமுகம் செய்து வைக்க வேண்டும் என்று இவன் காத்திருப்பதில்லை ஏதாவதொரு காரணத்தை வைத்து உதவிகேட்டு ஒரு வீட்டிற்குள் நுழையும் இவன் சில நாட்கள் செல்ல உமாராம் என்றொருவர் தமது குடும்பத்தின் அங்கத்தவர் என்று ஒவ்வொருவரும் நினைக்கும் விதமாக நடந்து கொள்வான்; அப்பு என்று தொடங்கும் இவன் அம்மா, ஐயா, அண்ணா, தம்பி, தங்கச்சி என்று ஒவ்வொருவரையும் வரிசையாக அழைத்து அனைவரும் எனக்கு உறவு. ஒருவரும் என்னை அந்நியப்படுத்த முடியாது என்று உணர்த்துவான் தூங்கும் அந்த ஒருசில மணிநேரம் தவிர ஆஸ்துமா நோயுடன் நாளாந்தம் பல மைல்கள் சைக்கிளில் திரிந்து இவன் ஆற்றும் கடமைகளைப் பார்த்த வன்னி மக்களின் கவனம் இவன்பால் ஈர்க்கப்பட்டது வியப்பல்ல.



லெப்டினன்ட் உமாராம்

வன்னி மண்ணில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினுள் கணிசமான பெண்போராளிகள் இணைந்து கொண்டமைக்கு உமாராமின் அணுகுமுறைகளும் காரணமாக இருந்தன. முதன்முதலாக இராணுவப்பயிற்சிக்காக பெண்களை அணிதிரட்டினான். இப்பணி அக்காலத்தில் மிகசிரமமாகவே இருந்தது. எமது சமூக அமைப்பில் வீட்டிற்கு வெளியில் பெண்கள் தனியே வருவதே அபச்சாரம் என்று கருதியகாலம். ஆனால் இவனது பிரசாரம் காற்றாகப் பரந்தது. இவன் உருவாக்கிய பல பெண்போராளிகள் வீரமரணமடைந்துவிட்டனர். பலர் இன்னும் இந்த மண்ணைக் காக்கும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர்.

எந்தப் போராளியும் தனது சொந்த மண்ணை விடுவிக்க அங்கேயே தனது கால்களைப் பதிக்க விரும்புவது இயல்பானதே. உமாராமும் மட்டக்களப்புக்குச் சென்றான். அங்கே இவனது முதல் போர்க்களம் ஏறாவூர் பொலிஸ் நிலையத் தாக்குதல். வெற்றிகரமாக நடைபெற்ற அத்தாக்குதல் முடிந்து வரும் போது ஒரு குழந்தையின் குதூகலம் இவனில தெரிந்தது. ஏறாவூரிலிருந்து வந்தாறுமூலைவரை இவனது பாட்டும் ஆட்டமும் வெடியோசை கேட்டு வீட்டுக்குள் முடங்கி இருந்த மக்களை வீதிக்கு வரவழைத்தது.

இத்தாக்குதல் முடிந்த சில நாட்களில் இவன் கரடியனாறு பகுதியில் அரசியல் வேலைகளுக்காக நியமிக்கப்பட்டான். அடிப்படைக் கல்வியறிவு மிகவும் குறைந்த பிரதேசம் அது. எமது இனத்தின் மீது இழைக்கப்படும் கொடுமைகளுக்கு விதிதான் காரணம் என்றே அங்குள்ள மக்களில் பெரும்பாலானோர் கருதியிருந்தனர். இவர்களோடு பழகி, அவர்களுக்குப்புரியக்கூடிய மொழிநடையில் அவர்களுடன் உறவாடி, அவர்களை படிப்படியாக அரசியல் அறிவும், போராட்ட உணர்வும் உள்ளவர்களாக மாற்ற இவன் எடுத்துக் கொண்ட முயற்சிகள் மிகமிக அதிகம் சாப்பாடு கொடுப்பதில் ஆரம்பித்த மக்கள் ஆதரவு சென்றி நிற்பதுவரை வளர்ந்தது. இந்தத் துவக்கால் எப்படிச் சுடுவது என்று கேட்டு, மறுநாள் கழட்டிப் பூட்டிக் காட்டுங்கள் என்று கேட்டு, இப்படியே படிப்படியாக தம்மை முழுநேர உறுப்பினர்களாக மாற்றிக் கொண்டனர் இளைஞர்கள். மக்களை வென்றெடுக்கும் பணியைத்திறம்படவேமேற்கொண்டுவந்த இவன் அடுத்து கல்முனைப் பிரதேசத்தில் அரசி

(7ஆம் பக்கம் பார்க்க)

# "உரங்களும் பசளைகளும்..."

சுந்தரம்பிள்ளையருக்கு இன்று நீல உறைக் கடிதங்கள் ஐந்துக்கும் மேலாக வந்திருந்தன.

சுமக்க முடியாமல் சுமந்து, வந்த தபால்காரப்பையன் கையில் அடுக்கிவைத்திருந்த கடித உறைகளை ஒன்றுஇரண்டாக தட்டி ஐந்துக்கும் மேற்பட்ட தபாலுறைகளை அவர் முன் நிலையில எடுத்து ஒன்றாகச் சேர்த்து கைகளில் திணிக்கையில் அவரது இதயமே நிறைந்து விட்டது.

நீல உறைக் கடிதங்களை எதிர்பார்த்து இருந்த அவருக்கு இன்று நல்ல வரப்பிரசாதம்.

அவருக்கு என்றில்லாமல் நீல உறைக் கடிதங்களை எதிர்பார்த்து இருந்த அனைத்துப் பேருக்குமே அப்படித்தான் இன்று நீல உறைகள் ஐந்துக்கும் மேல் வந்திருந்தன.

ஜூன் மாதயுத்தம்ஆரம்பித்த பின்பாக, இரண்டு மாத இடைவெளிக்குப் பிறகு ஒரு கடிதம் வந்ததைத் தவிர– சுந்தரம் பிள்ளையருக்கு மட்டும் என்றில்லாமல நீல உறைகளை எதிர் பார்த்திருந்த எல்லாருக்கும்– ஒரு கடிதமும் வராதநிலைமைதான் இருந்து வந்தன.

'குமண' கப்பலில் எடுத்து வரப்பட்ட கடிதங்களில் இம்முறைதான் நீல உறைக்கடித காரர்களுக்கு நல்ல வேட்டை!

தபால் விநியோகப் பையன் தோள்களிலும், கைகளிலும் சுமந்து வந்திருந்த கடிதங்கள் அனைத்துமே நீல உறைகளைக் கொண்டவையாகத்தான் இருந்தன.

சுந்தரம்பிள்ளையர்வீட்டை விட்டு அகதியாக இடம் பெயர்ந்து போயிருந்த காலத்தில் யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கும் - பெரிய தபால் கந்தோருக்குமாக நீல உறைகளைத் தேடி பல தடவைகள் அலைந்திருந்தார்.

ஜூன் மாதம் சண்டை ஆரம்பமானதும் ஒரே மகனை இரண்டு மாதங்களுக்கு முன்பாகக் கனடாவுக்குப் பிடித்து அனுப்பி விட்டதில் அவருக்கு நிம்மதி அந்தவகையில் சில ஆயிரங்கள் அவருக்குக் கடனும் சூழ்ந்திருக்கிறது.

''இஞ்சேர் ஆறுமுகம்... உந்தக் கடனை ஒரு கடிதம் வரத் துடைச் செறிஞ்சு போடுவன் கண்டியோ...;

ஆறுமுகம், சுந்தரம்பிள்ளையரின பால்ய நண்பர். ஆறுமுகத்தின் மூதத பொடியன் திடீரென்று ஒருநாள் இயக்கத்துக்குப் போய் விட்டதைக் கேள்விப பட்டதும் சுந்தரம் பிள்ளையரின் மனம் அனல் பட்ட புழுவாகத் துடித்தது

அந்தத் துடிப்பின் வேகந்தான் மனைவியின் கழுத்தல், காதுகளில் – கைகளிலுமாக கிடந்ததுகளை புடுங்கி மகனைக் கனடாவுக்கு அனுப்பி வைக்கத் தூண்டியது.

'நீ புளைவிட்டுட்டாய் ஆறுமுகம்... காசைக் காசெண்டு பாத்தாய்... பாத்தியே அவன் இண்டைக்கு ஒண்டுக்கும் உதவாமைப் போயிட்டான்...'

சுந்தரம்பிள்ளையர் இப்படிச் சொல்கையில் ஆறுமுகத்தாரின் மனமும் அதைச் சரியென்றுதான் ஏற்றுக்கொண்டது.

'ஆக உள்ளதும் இரண்டு பொடியள். இளையவன் இப்பதான் படிப்பு முடிஞ்சு இருக்கிறான். கடனைக் கிடனைப் பட்டு மூத்த பொடியனை வெளிநாட்டுக்கு அனுப்பி இருந்தால் நாரி முறிய இருந்து சுருட்டுச் சுத்தும் வேலைக்கு ஓய்வு குடுத்து விட்டு கொஞ்சம் மூச்சு விட்டிருக்கலாம்'

சுந்தரம்பிள்ளையர் தனது மகனை வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்த பின்பாக அவரைச் சந்திக்கின்ற நேரங்களில் ஆறுமுகத்தின் நெஞ்சில் இந்த எண்ணம் வந்து சரடும்.

ஆறுமுகத்தின் மகன் இயக்கத்துக்குப் போயிருந்த ஆறு மாதத்தில் பெரும் சண்டையும் மூண்டிருந்தது.

அவன் இயக்கத்துக்குப் போன ஆரம்ப நாட்களில் சுருட்டு உழைப்பையும் விட்டுவிட்டுப் பல தடவை அவனை மீட்டு வந்து விடலாமென்று அலைந்து திரிந்தும் முயற்சி முயற்கொம்பானபின்புஓய்ந்து விட்டார் அவர்.

''சுந்தரம்பிள்ளையர் கெட்டிக்காறர்தான்... பொடியனைப் பிடிச்சுப் புத்தியா அனுப்பப்போட்டார்... என்ரை தலைவிதி இன்னும் கிடந்து மாரடிக்க வைச்சிட்டான் கடவுள்...''

எங்களோட கிடந்து சாகிறதிலும் பாக்கப் போராடிச் சாகிறது நல்லதுதானே....''

சண்டை ஓய்வதாக இருக்கவில்லை.

வடபகுதியில் நிலைகொண்டிருந்த அரச படைகளின் முகாம்கள் ஒவ்வொன்றாகப் பறிபோய்க் கொண்டிருந்தன.

யாழ். கோட்டை முகாம் வீழ்ந்தது. சிங்களப் படைகள் மடிந்தது. மடிய எஞ்சிய ஒரு சிலர் மண்டை தீவுப் பக்கமாக ஓடித்தப்பினர்.

கோட்டையில் இருந்து பின் வாங்கியது போலவே மண்டை தீவுக்கு வந்து முகாமிட்டிருந்த படைகளும் ஊர்காவற்றுறை நோக்கி நகர்நதன.



இயலாமையின் வெளிப்பாடான ஒருநாள் ஆறுமுகத்தார் அலுத்துக் கொண்டதைக் காதுகளில் வாங்கிக் கொண்ட அவரது மனைவியும் அவரின் இயலாமையில் பங்கெடுப்பதைத் தவிர வேறென்னசெய்ய முடியும்?

சண்டை மாதக்கணக்கில் வளர்ந்தபோது இலக்கில்லத அரச படைகளின் தாக்குதலுக்கு இலக்காகி ஆறுமுகத்தாரின் குடும்பமும் அகதியானது.

''என்ரை மற்றப் பொடியனும் இயக்கத்துக்குப் போயிட்டான்...''

அகதிகளாக ஊரை விட்டு ஊர் வெளிக்கிட்ட நான்காவது மாதம் சந்தை ஒன்றில் சுந்தரம்பிள்ளையரைக் கண்ட ஆறுமுகம் அவருடன் இந்தச் சங்கதியைப் பகிர்ந்து கொண்டார்.

மூத்தமகன் இயக்கதிதுக்குப் போயிருந்த அந்நிய நாட்களில் அவரில் காணப்பட்ட தடுமாற்றம் இப்பொழுது இல்லாததைச் சுந்தரம்பிள்ளையர் அவதானித்தார்.

''என்ன மடை வேலை பாத்திட்டான் இந்தப் பொடியன்... கடைசி காலத்தில தாய் தேப்பனுக்குத்தானெண்டாலும் உதவியா இருப்பமெண்டில்லாமல்...''

ஆதங்கப்பட்ட சுந்தரம் பிள்ளையருக்கு ஆறுமுகத்தாரின் பதில் ஆச்சரியத்தை ஊட்டியது.

''அதுதான்நல்லது பிள்ளையர் சண்டேல நாங்களெங்க தப்புறமோ இல்லையோ...

யாழ் கோட்டையில் இருந்து ஷெல்லடிகள், மண்டை தீவுக்கடலில் நின்ற கடற்படைப் பீரங்கிகள், விமானக் குண்டு வீச்சுகளால் இடம் பெயர்ந்து சென்றவர்கள்

**தேவிபரமலிங்கம்**

மெதுமெதுவாகத் தத்தமது இடங்களுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தனர்.

அகதி முகாம்களில் கொடுக்கப்பட்ட நிவாரணங்களால் ஆறுமுகத்தாரும், மனைவியும் காலத்தை கால்வயிறு அரை வயிறு கழுவிப் போக்கிக் கொண்டார்கள்.

இடையிடையே சுருட்டுத் தொழிலும் கை கொடுத்தது.

சுந்தரம்பிள்ளையர் மனைவியுடன் தெரிந்த அயலார் வீடொன்றில் காலத்தைக் கழித்துக்கொண்டார்.

இநந்த கடனுடன் மகன் அனுப்ப இறுத்துவிடலாமென்று கடனும் வாங்கிக் கடந்த காலங்கள் செவ்வனே போயிருந்தன அவருக்கு.

பணப்புழக்கம் இநந்தவர்களும் சுந்தரம்பிளளையருக்குத் தாராளமாக உதவ முன் வந்தனர்.

கோட்டை இராணுவம் போன பின்பாகக் கணிசமான குடும்பங்கள் ஊர் திரும்பி இருந்தாலும் முற்றுமுழுதாகத் திரும்பவில்லை.

வீடுகள் தரைமட்டமாகிக் கிடந்தன. ஓரளவுக்குத் தப்பிய வீடுகளும் திருத்தவேண்டி இருந்தன.

கிராமத்தவர்களில் அரைக் கரைவாசிப் பேர்கள் அகதிகளாகக் கடல் கடந்து போய் விட்டிருந்தனர்.

இன்னும் சிலர் நிவாரணம் கிடைத்துக் கொண்டிருந்ததால் முகாம்களை விட்டுப் போக மனம் இல்லாதாவர்களாக முகாம்களில் ஒட்டிக் கொண்டிருந்தனர்.

''முகத்தாற்றை மூத்தவன் கட்டுவனில் நடைபெற்ற நேரடி மோதலில் களப்பலி ஆகிவிட்டானாம்''

ஊருக்குத் திருப்பி வந்திருந்த குடும்பங்களில் சுந்தரம்பிள்ளையர் ஆறுமுகம் குடும்பங்களும் அடங்கியிருந்ததால் முகத்தார் வீட்டிற்கு பிள்ளையர் சென்று கவலை தெரிவித்துக்கொண்டார்.

ஆறுமுகத்தார் வீடு அந்த ஊராகத் திரண்டிருந்தது. பழக்கமில்லாத புதிய முகங்களும் தமது குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரை இழந்துவிட்தான உணர்வுகளுடன் கலந்து கொண்டிருந்ததைக் காணப் பிள்ளையருக்குப் புல்லரித்தது.

''நிகரில்லாத ஒரு வீரனை எமது மண் இழந்துவிட்டது – கொககாவில்... யாழ். கோட்டை... வெற்றிகளின் பங்கில் தபோதரனின் பங்கு உன்னதமானது....''

ஆறுமுகத்தாரின் மூத்த மகன் இறந்துவிட்டதாக எவரும் கருதவில்லை. தமிழ் மக்களின் இதயங்களில் என்றென்றும் வாழ்ந்து கொண்டிருப்பான் எனறே கதைத்துக் கொண்டனர்.

வீதிகள் எங்கும் மாவிலைத் தோரணங்கள் கட்டுவதில் இளைஞர்கள் ஈடுபட்டிருந்தனர். ஊரே முகத்தாரின் இல்லத்து இழப்பில் பங்கெடுத்துக் கொண்டிருந்ததால் அவருக்கும் மனைவிக்கும் மகனை இழந்துவிட்டதான நிலை பாதிககவில்லை.

''மாவீரர் ஒருவர் தம் மண்ணுக்காக மரணிக்கையில் இன்னும் பல மாவீரர்களை உருவாக்கி விட்டுத்தான் மரணிக்கிறார். எனவே எமது இன விடுதலைக்கான போராட்டம் பன்முகப்பட்ட நிலையில் முன்னெடுக்கப்படுகிறது.''

தபோதரனின் புகழுடல் அவனது இல்லததிற்கு சகல இராணுவ மரியாதைகளுடனும் எடுத்துவரப்பட்டு அஞ்சலிக்காக ஒருநாள் வைக்கப் பட்டிருந்தது.

மாவீரர் மயானத்திற்கு இறுதி யாத்திரை ஆரம்பிக்க முன்பாக புகழுடல் சனசமூக முன்றலில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு புகழுரைகள் நிகழ்த்தப்பட்டன.

சகலவற்றிலும் சுந்தரம்பிள்ளையரும் கலந்துகொண்டு வீடு திருப்பி இருந்தார்.

தபோதரனின் இறுதி ஊர் வலம், அஞ்சலி உரைகள், ஊரே திரண்டுநின்று உருக்கமாகக் கண்ணீர் அஞ்சலி செலுத்தியமையைப் பார்த்து பிள்ளையரின் இதயம் பொறாமையால் குமைந்தது.

அக்கணத்தில் தபோதரன் தனது மகனாக இருக்கக் கூடாதா என்றும் அவரது மனம் சிறுமைகொண்டது.

''எம்மில் பலர் தமது பிள்ளைகளைப் பிற நாடுகளுக்கு அனுபபிவிட்டுச் சுளை சுளையாகப் பணத்தைப் பெறுவதற்காக இந்த மண்ணில் அந்நியர்களாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்...''

தபோதரனின் அஞ்சலிக் கூட்டத்தில் இவ்வாறு குறிப்பிட்டபொழுது எத்தனை தலைகள் கவிழ்ந்து போயின?

அவற்றில் ஒன்றாக சுந்தரம் பிள்ளையரின் தலை கூட கவிழ்ந்து போயிற்று.

காலக்கிரமத்தில் ஆறுமுகத்தார் வீடு இயக்க அமைப்பாகவேமாறி இருந்தது.

இளைஞர்கள், வீராங்கனைகள் வநது சென்று கொண்டிருந்கமையால் மகன்மார் இல்லாததால் சூழ்ந்த வெறுமை முகத்தார் குடும்பத்தைப் பாதிக்கவில்லை, அவரது மனமும் 'இன்னும் பல ஆண்டுகள் சுருட்டுச் சுத்தியே தன்னால் வாழமுடியும்' என்ற தெம்புடன் செயல்படத் தொடங்கி இருந்தது

''இஞ்சை பாரணை இண்டைக்குத் தான் முழுக் கடிதத்தேம் கொண்டந்து தந்திட்டுப் போறான்...''

தபால்காரன் கைகளில் திணித்த நீல உறைகளுடன் வீட்டுக்குள் நுழைந்த பிள்ளையரின் குதூகலத்தில் மனைவி செல்லம்மாளும்கலந்துகொண்டாள்.

மகன் கனடாவுக்குப் போய் எட்டு மாதங்கள் ஆகிறது.

- 6ஆம் பக்கம் பார்க்க



கவிதை

## திருப்பம்

எண்ணிப் பாருங்கள்
எத்தனை நாட்கள்
ஏமாற்றினார்கள்
என்று

திரும்பிப் பாருங்கள்
எத்தனை சந்ததி
ஏமாற்றப்பட்டதென்று

கூர்ந்து பாருங்கள்
கிழக்கில் எத்தனை
கிராமங்களுக்கு
கிரிகைகள்
முடிந்ததென்று

இன்னும் எத்தனை
நாட்கள்
நீறாகிப் போன
எலும்புகளுக்கு மேல்
நடப்பது
நாளையும்

துப்பாக்கி இரவைகள்
உண்ட உடல்கள்
நீள் தெருவில்

தந்தையையும்
தமக்கையையும்
இழந்த
கடைக்குட்டிச் சிறுவன்
விரல்கள்இல்லாத
கைபோன்று
தாயின் கருகிய உடலை
மோர்ந்து அழுகின்றான்

சமாதியில்
குத்தப்பட்டிருப்பது
உண்மையான
துப்பாக்கி அல்ல
என்றாலும்
சிறுவனின் முகம்
அங்கே

-தங்கராசா
றெஜீந்திரகுமார்

# எரியும் 600 எண்ணெய் கிணறுகளுடன் போராடும் அமெரிக்க 'பல்டேகா'

பாரசீக வளைகுடாப் போர் ஓய்ந்துவிட்டது. ஆனால் அங்கு மழை விட்டும் தூவானம் ஓய்ந்தபாடில்லை. ஈராக்கில் உள்நாட்டுக் கலகம் வெடித்துள்ளது. ஈராக்-ஈரானுக்கிடையில் கெடுபிடி யுத்தம் (Cold War) நடைபெறுகிறது. அமெரிக்கா தனது ஏகாதிபத்திய நலன்களைப் பாதுகாக்கப் பகிரதப்பிரயத்தனம் செய்து வருகிறது.

குவைத்திலிட்ட தீ இன்னும் அணையவில்லை. 60 லட்சம் பீப்பா எண்ணெய் குவைத்தில் எண்ணெய்க் கிணறுகளிலும், எண்ணெய் வயல்களிலும் எரிந்துகொண்டிருக்கின்றன. பல லட்சம் கோடி அமெரிக்க டாலர் பெறுமதியான இந்த எண்ணெய் எரிந்து நாசமாவதைத் தடுக்கப் பலர் போராடியவண்ணம் உள்ளனர். தீயை அணைக்கச் சுமார் ஒருவருடம் வரை செல்லக்கூடும் என்று துறைசார்ந்த நிபுணர்கள் கூறுகின்றனர். எரிகிற வீட்டில் கொள்ளி எடுப்பதுபோல் சிறிலங்கா தொழில் அமைச்சு அங்கு வேலைவாய்ப்புகளைத் தேடுகிறது. எண்ணெய் உற்பத்தி நிறுத்தப்பட்டதால் நாள் ஒன்றிற்கு குவைத்திற்குப் பத்துக்கோடி அமெரிக்க டாலர் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக அறிக்கைகள் கூறுகின்றன.

### தீயணைக்கும்பணி

குவைத்தில் எண்ணெய்க் கிணறுகளுக்கு ஏற்பட்டிருக்கும் பாரியசேதத்தைநிவர்த்தி செய்வதற்கான முதலாவது அறிகுறிகள் தென்படுகின்றன. தீயணைக்கும் படையினர் இயந்திர சாதனங்களைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எனினும் குவைத்தில் போதிய அளவு நீரில்லாமை இவர்கள் பணிக்குப் பெரும் தடையாகவுள்ளது.

இந்தத் தீயை முற்றாக அணைக்கும் பணியை அமெரிக்க பல்டேகா நிறுவனம் பொறுப்பேற்றுள்ளது. இந்த நிறுவனம் அனைத்து உலகிலும் தீ அணைக்கும் வேலையில் அரைநூற்றாண்டு காலத்துக்கு மேலான அனுபவம் உள்ளது. இந்த நிறுவனம் பாரசீக வளைகுடா எண்ணெய்க் கிணறுகள் தொடக்கம் லிபியா வரை ஏற்பட்டுள்ள தீயை அணைத்து அனுபவம் பெற்றதாகும். லிபியாவில் 1905 இல் ஆறு கிணறுகளில் பற்றிக்கொண்ட தீ இந்த நிறுவனத்தினால் ஒரே சமயத்தில் அணைக்கப்பட்டது. தேவைக்கேற்றவாறு அமைக்கப்பட்ட உபகரணங்கள், அதுவும் பயன் பொருத்தமான உபகரணத் தொகுதிகள் போதிய அளவில் கிடைக்காமை தீ அணைப்பதில் ஏற்பட்டுள்ள ஒரு முக்கிய தடையாகும்.

தீ அணைக்கும் நிறுவனம் குவைத்தில்மூண்டெழும்தீயை அணைக்க மாற்றுவழிகளைக் கையாள முடியும். வெடிமருந்துகளை உபயோகித்தல், காற்றில் சுவாலையை அகற்றுதல், சுவாலைக்குக் கிடைக்கும ஒட்சிசனைத் தடுத்தல் ஆகிய மூன்று வழிகளை வெற்றிகரமாகக் கையாளலாம். மற்றும்படி, [வேறு கிணறுகளைத் தோண்டி எண்ணெயை அவற்றினுள் வடியவிடலாம், அல்லது பெருமளவு நீரை ஊற்றி சுவாலையை அமுக்கி அணைத்தும்விடலாம். இதற்கான நீரை நீண்ட குழாய்கள் மூலம் ஆழமான கிணறுகளிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

குவைத்தில் ஒரே சமயத்தில் 600 க்கும் மேற்பட்ட எண்ணெய்க் கிணறுகள் தீப்பற்றி எரிந்து கொணடிருப்பது பல்டேகா நிறுவனம் முகம் கொடுக்க வேண்டிய மிகப் பெரிய சவாலாகும். எது எப்படியாயினும், தீயணைக்கும் பணியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்வதற்கு சுமார் ஒரு வருடகாலம் பிடிக்கக்கூடும்.

### சர்வதேசப் பேரிழப்பு வலயம்

பாரசீக வளைகுடாப் பகுதியைச் சர்வதேசப் பேரிழப்பு வலயமாக (International Disaster Area என்று பிரகடனப் படுத்தினால் என்ன? வளைகுடாபபோர் அப்பகுதியில் வாழும் எல்லா உயிரினங்களுக்கும் கேடுவிளைவித்துள்ளது. இப்பகுதியில் போரின் விளைவுகள் தொண்டை நோய், சுவாசப்பை நோய், புற்றுநோய், இருதய நோய் போன்ற ஆபத்தான நோய்களையும் கொண்டுவரும். இப்பகுதிகளிற் சூழலின் சமநிலையும் குழம்பியுள்ளது.

★ ஈராக் ஏற்படுத்திய எண்ணெய்க் கசிவு கடலுடன் கலந்ததனால் வளைகுடாக் கடலில் சில பகுதிகளில் ஒட்சிசன் குறைந்து காணப்படுகிறது. இதனால் காலப்போக்கில் கடல்படு பிராணிகளுக்கு ஆபத்து உண்டாகும். இப்பிரதேசத்திலுள்ள கடல்படு உணவையுட்கொள்ளும் மக்களும் பாதிக்கப்படலாம். 1972 இல் யப்பானில் மினிமோட்டா குடாவில் பிடிக்கப்பட்ட மீனை உண்டவர்களுக்கு மினிமோட்டா நோய் உண்டாகியதை உதாரணமாகக் காட்டலாம்.

★ தரைச் சூழலும் மாறுபட்டுள்ளது. எண்ணெய்க் கசிவு இரசாயனப் படிவுகளினால் தரைச்சூழலின் சமநிலை பாதிப்படைந்துள்ளது. எண்ணெய்க்கசிவு மக்கள் வாழும் பகுதிகளுக்குப் பரவத் தொடங்கியுள்ளது. இதனால் வளைகுடாப்பகுதியில் சங்கிலித்தொடர்போல் பயிர்களின் வளர்ச்சி அழிந்துவிடலாம். வளைகுடாவில கிடைக்கும் உணவு வகைகளை உண்பதினால் உடல்நிலை பாதிப்படையும்.

★ ஈராக் வைத்த தியால் சில கிணறுகளில் தீப்பற்றவில்லை. எரியும் கிணறுகளிலிருந்து வெளிவரும் வெப்பத்தினால் எரியாத கிணறுகள் ஐதரசன் சல்பைட்டை வெளிபடுத்துகின்றன. இந்த நச்சு வாயு வளிமண்டலத்துடன் கலக்கிறது. இத்துடன் பெற்றோலியம் எரியும் புகையும் வளிமண்டலத்துடன் கலந்து வழியை மாசுபடுத்துகின்றது. இதனால் தாவரங்களுக்குத் தீங்கு உண்டாகும். பின்னர் இது மனிதனையே பாதிக்கும். எதிர்காலத்தில் இப்பகுதிகளில் பிறக்கும் குழந்தைகள் அங்கவீனர்களாகப் பிறக்கலாம்.

★ பெற்றோலியம் எரிவது அடர்ந்த புகைப்படலமாக இருப்பதால், சூரியனின் ஒளி பூமியில் விழாது தடை செய்யப்படுகிறது. குவைத்தில் மழைமேகம் போல் மூட்டம் போட்டிருக்கும் புகைமூட்டத்தின் நிழலில் வெயிலுக்கு ஒதுங்குகிறார்கள் என்றால், புகைப்படலத்தை எண்ணிப் பாருங்களேன்! புகையுடன் சேர்ந்தாற்போல் போர் விமானங்கள், ஏவுகணைகளிலிருந்து வெளியேறும் நச்சு வாயுக்களும் சேர்ந்து ஒளிமண்டலத்தில் மேற்படலமாக அமைந்துள்ள ஓமோன் படலத்தைப் பாதிக்கின்றது. இது சூரியனின் கதிர்கள் சில பூமியில் விழாமல் தடை செய்கின்றன. ஓமோன் படலப் பாதிப்பினால் உயிரினங்களுக்கு ஆபத்து உண்டாகலாம்.

★ 50 டெசிபலிக்குக் கூடிய ஒலி மனிதனுக்குக் கூடாது. பாரிய குண்டுவெடிப்புச் சத்தங்களினால் சூழல் மாசடைதல் ஒருபுறமிருக்க, இப்பகுதி மக்களுக்கும கேடு விளைவித்திருக்கிறது. இந்தச் சத்தம் மனிதனுடைய நரம்புத்தொகுதியைப் பாதிக்கின்றது. மனிதனுடைய உளவளமும பாதிப்படையக்கூடும். இத்தாக்கம் பின்னர்தான் உணரப்படும்.

வளைகுடாப் போரினால் குவைத்தின் எண்ணெய்க்கிணறுகள் எரியலாம் அதனால் அதன் பொருளாதாரம் கருவழியலாம். ஆனால் வளைகுடாநாட்டு மக்களின் சுக வாழ்வு பாதுகாக்கப்படுமா? இது கேள்விக்குறியாகவே உள்ளது. எதிர்காலம் தான் பதில் சொல்லவேண்டும்.

**மதன்**

# போதைப்பொருள் பாவனையின் ஆபத்துக்களும் தடுப்பதற்குரிய சில வழிமுறைகளும்

## மருத்துவ பகுதி

மனிதனுடைய மனநிலையிலும் (Mental State) மூளையின் திறனிலும் மாற்றங்கள் செய்யக்கூடிய சில பதார்த்தங்கள் இயற்கை மூலவளங்களிலும்காணப்படுகின்றன. உதாரணமாக, புகையிலை, மதுசாரம், 'கனாபிஸ்' (Cannabis), LSD, நாக்கோட்டிக் மயக்க மருந்துகள் (Narcotic Anaigesics)மூளையையும் நரம்புகளையும்தூண்டும்போதைப் பொருள்களான 'அம்பிற்றாமைன்ஸ்' (Amphetamines) 'கொக்கேயின்' (Cocaine) என்பனவாகும்.

போதைப் பொருள்களை மருத்துவர்திபில் மூன்று வகையாகப் பிரிக்கலாம். மூளை விழிப்புநிலையை (Alter the Perception) பாதித்தல் மூளையைத் தூண்டுதல் (Stimulate the Brain), மூளையை மந்தமடையச் செய்தல் (Depress the Cns) என்பனவாகும்.

### போதைப் பொருள்களை உட்கொள்கின்ற முறைகள்

வாய்மூலம் சிலர் உட்கொள்வார்கள். உதாரணமாக, மதுபானம், பென்ஸோடயசிபான்ஸ்' குளோர் மெத்தியாசோல்' 'ஓப்பியம்' என்பனவாகும். சுவாசத்தின் மூலம் சிலர்உட்கொள்வார்கள். உதாரணமாக, புகையிலையினால் 'நிக்கோட்டின்' (Nicotine), 'கனாபிஸ்', 'கொக்கேயின்' 'நாக்கோட்டிக் அனஸ்ஜீசிக்ஸ்' என்பனவாகும்.

மோசமான போதைவஸ்து பாவனையாளர்கள் ஊசி மூலம் போதைப் பொருள்களை ஏற்றிக்கொள்வார்கள். இது நேரடியாக இரத்தத்தில் சேருவதால், மூளையில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

### போதைப்பொருள் என்னசெய்யும்?

சந்தோஷமாக (Euphoria) இருப்பது போன்ற ஒருவிதமான போலியான உணர்வைக் கொடுக்கும். தொடர்ந்து தூக்கக் கலக்கத்தை அல்லது மயக்கத்தைக் கொடுக்கும். வித்தியாசமான நிழல்கள், படங்கள், நிறங்கள், சத்தங்கள் தெரிவது போலவும் கேட்பது போலவும் கற்பனைகள் வரும். உடலைப் பற்றிய வித்தியாசமானஉணர்வுகள் ஏற்படும் பின்பு இருதயத் துடிப்பு அதிகமாகும். (Tachycardia) கண்கள் சிவக்கும். கைகள் நடுங்கும். நடை தடுமாறும். உடலின் வெப்பம் அதிகரித்து (Hyperthermia) உணர்ச்சிவசப்படுவர். கண்களுக்கு வித்தியாசமான புதிரான உருவங்கள் (Visual Hallucinations) தெரியும். இறுதியில் முற்றாக மதியிழந்து வரிந்துகட்டிக்கொண்டு வீண் வம்பு சண்டைகளுக்குப் போவார்கள். தாம் என்ன செய்கிறோம் என்பது தெரியாமல் நிலைதடுமாறுவார்கள். இவை போதைப்பொருள்களின் அடிப்படை அம்சங்கள்.

### போதைப் பொருளினால் ஏற்படும் ஆபத்துக்கள்

இவற்றை இரண்டாகப்பிரிக்கலாம் முதலாவதாக, போதைப் பொருள்கள் பாவிக்கின்ற முறைகளினால் ஏற்படுகின்ற ஆபத்துகள். (Non-Drughazards) அதாவது, ஊசிமூலம் தனது போதைப் பொருளை எடுப்பவருக்கு, 'செங்கமாரிநோய்' (Hepatitis-B) HIV, நோய் என்பன ஏற்படும். ஊசி அடிக்கடி போடுகின்ற இடத்தில் சுத்தமின்மையில் சிதழ் கட்டும். தோலில் தொற்றுகின்ற கிருமிகள் (Bacteria) மூலம், இரத்தக் குழாய்களும், இருதயத்தின் வால்வகளும் (Bacterial Endo Carditis தாக்கப்படும். 'பங்கசு' (Candidiasis) வியாதி ஏற்படும் போதைப் பொருளை ஊசிமூலம் நாளத்திற்குள் (Veins)ஏற்றுவதற்குப் பதிலாக, போதையில் நாடிக்குள்(Artery) ஏற்றினால் கைகளைத் துண்டிக்கும் (Digital Gangrene) ஆபத்து ஏற்படும்.

### முக்கியமான ஆபத்து

போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் ஆபத்து போதைப்பொருளின் தன்மை, அதன் செறிவு முக்கியமாக அது உட்கொள்ளப்படுகின்ற முறை (Methods of Ause), உதாரணமாக வாயினால் உட்கொள்ளுவதைவிட, ஊசி மூலம் உட்செலுத்துவது கூடிய ஆபத்தைத் தரும்.

### உடனடி ஆபத்து

போதைப்பொருளை தவறுதலாக அதிகளவில் (Accidental Overdosage) அல்லது போதை ஏறிய பின்னர், மேலும் போதையைக் கூட்டுவதற்காக, என்னத்தை ஏற்றுகிறோம்] எவ்வளவு ஏற்றுகிறோம் என்று தமக்குத்தாமே அல்லது போதையிலுள்ளவர் மற்றவருக்கு ஏற்றும்போது அல்லது குடிக்கும் போது, உடனடியாக மயக்கமும், கடுமையான வாந்தியும், வலிப்பும் ஏற்பட்டு மரணம் ஏற்படும். இங்கு வேடிக்கையான விடயம் என்னவென்றால், போதைப் பொருள்களை இவ்வாறு எடுப்பவர்கள் அனேகமாக தனியாக ஒழித்திருந்து எடுப்பதால் இவர்களுக்கு இத்தகைய ஆபத்து ஏற்படும்போது உதவி செய்ய யாருமே அருகில் இல்லாததால் மரணமடைவார்கள். சிலவேளைகளில் இரண்டு மூன்டு பேர்களாக சேர்ந்து போதைப் பொருளை எடுக்கும்போது, ஒருவருக்கு மயக்கமேற்பட்டு உயிராபத்து ஏற்படும்போது மற்றவர்களும் போதையில் இருப்பதால் இவருடைய ஆபத்தை மற்றவர்கள் உணர மாட்டார்கள். அவருக்கு நல்லபோதை ஏற்பட்டுவிட்டது என்றுதான் நினைத்துக் கொள்வார்கள். ஒருவேளை அவருடைய ஆபத்தை உணர்ந்தாலும், பயத்தில் அல்லது குற்றஉணர்வில், இவரை ஆஸ்பத்திரிக்குக்கொண்டுபோனால் தாமும் மாட்டுப்பட்டு விடுவோமோ என்று உதவிசெய்ய தயங்குவார்கள். எனவே போதைப்பொருள் பாவிப்பதைப் போன்ற கொடிய ஆபத்து வேறொன்றுமில்லை.

### வேறு ஆபத்துகள்

போதைப் பொருளை குறிப்பாக முதன் முதலில் அதுவும் ஊசிமூலம் எடுப்பவர்களுக்கு கடுமையான வாந்தி, உடல் குளிர்ந்து, சில மணித்தியாலங்களுக்குள் கடுமையான வயிற்றோட்டம் ஏற்படும். இருதயத்துடிப்பு அதிகமாகி இரதத அழுத்தம் சடுதியாக குறையும். (Hypotension)இதனால் மாரடைப்பு (Angina) மூளையில் ஏற்படும் பாரிசவாதம் (Stroke) என்பன கூட ஏற்படற்கூடிய ஆபத்திருக்கிறது.

### நீண்டகாலத்தில் ஏற்படும் ஆபத்துகள்

(Long Term Effects) நீண்டகாலமாக ஒரேவிதமான அல்லது வெவ்வேறுவிதமான போதைப் பொருள்களைப் பாவிப்பவர்களுக்கு உடலின் முக்கியமான உறுப்புக்களான கண்கள், இருதயம், சிறுநீரகங்கள், ஈரல், தோல் என்பன பாதிக்கப்படுவது ஒருபுறமிருக்க மூளையிலும் நரம்புத் தொகுதியிலும் ஏற்படுகின்ற ஆபத்து மிகவும் பாரதூரமானது. இதுதான் மனோநிலையும் அதனால் வாழ்க்கையும் பாதிக்கும். போதைப்பொருள் ஒருவிளையாட்டுக்குத்தன்னும் ஒரு முறைதன்னும் பாவிக்காமல் இருப்பதே மிகச்சிறந்த தடுப்பு முறையாகும். ஒரு முறை தானே விளையாட்டுக்குத் தானே என்று முதன்முறை எடுப்பவர்களை போதைப் பொருள் இரண்டாம் முறை எடுக்கவைத்துவிடும். இரண்டாம் முறை எடுத்தவர்களை பலமுறை எடுக்கக் கூடியதாக அடிமைப்படுத்திவிடும் இது போதைவஸ்துகளுக்குரிய தனி இயல்பு இந்த அடிப்படையில் தான் சமுதாயமொன்றுக்குள் போதைப் பொருள்களைவிற்க முயல்பவர்கள் ஆரம்பத்தில் ஓரிருமுறைகள் இலவசமாகவே தமது போதைப் பொருள்களை கொடுப்பார்கள். ஏனெனில் இரண்டு மூன்றுமுறை இதனைப் பாவித்தவர்கள், தங்களைத்தேடி வருவார்கள் என்று அவர்களுக்குத் தெரியும். எனவே தான் போதைவஸ்துக்கள் பாவிப்பது மட்டுமல்ல விற்பனை செய்வதுகூட கடுமையான குற்றமாகக் கருதப்படுகிறது. உலகத்தில் சில நாடுகளில் உதாரணமாக மலேசியாவில் மரணதண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படுகிறது. எனவே எமது சமுதாயத்திற்குள்ளும் போதைப் பொருள் ஊடுருவுவதைத் தடுப்பது எமது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

**டாக்டர் சீர்மாறன்**

# தமிழீழ விடுதலைப் போராட்டமும் தமிழ்த் தேசிய வாதமும்

ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகட்கு முன்னர் போர்த்துக்கேயரினால் யாழ்ப்பாண அரசு தோற்கடிக்கப்பட்டது. தொடர்ந்து சில ஆங்கிலேயர் வன்னியில் பண்டாரவன்னியனைத் தோற்கடித்து, வன்னிப் பகுதியில் தம் ஆதிக்கத்தினை உறுதிப்படுத்திக்கொண்டனர். இவ்வாறு தான் இத்தீவில் எமது அரசை — அதாவது தமிழ் அரசை அந்நியரிடம் நாம் இழந்தோம்.

பின் இந்த நூற்றாண்டின் மத்திய பகுதிகளில் ஆங்கிலேயர் தீவைவிட்டு வெளியேறும் போது தமிழர்களின் அரசை சிங்களவர்களிடம் ஒப்படைத்து விட்டுச் சென்றனர். அன்றைய தமிழர் தலைமைகள் ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டனர். சுருக்கமாய்க் கூறுவதெனில் எமது மண்ணும் உரிமை சிங்கள பேரினவாதிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

நீண்ட மூன்று நூற்றாண்டுகளாய் தமக்கென ஒரு அரசு இன்றி தமிழினம் தீவில் வாழ்ந்து பழகிவிட்டது. உலகிலேயே தமிழருக்கென ஒரு அரசு கிடையாது. அரசின்றி வாழ்ந்த நிலையினால் எமது இனம், எமது மொழி, எமது மதம், எமது தேசம் பற்றிய சிந்தனைகள் தமிழரிடம் அற்றுப் போய்விட்டன. மறுபுறம் சுயநலப் போக்குகள் மிகத் தீவிரமாய் தமிழரிடம் வளர்ந்தன. தேசமும், இனமும் அழிக்கப்படும்போதும் தான் மட்டும் தப்பிக்கொள்ளும் வழியை தமிழன் தேடப் பழகிவிட்டான்.

இந்நிலை இன்று நேற்று ஏற்பட்டதல்ல. ஆங்கிலேயர் இத்தீவில் பாடசாலைகளை நிறுவி ஆங்கிலக் கல்வியையும் கிறிஸ்தவ மதத்தையும் போதிக்க பெரும்பாலான தமிழர்கள் எவ்வித தயக்கமும் இன்றி இவற்றை ஏற்றுக்கொண்டு ஆங்கிலேயருக்கு விசுவாசமான ஊழியர்களாய் செயற்பட்டனர்.

ஆனால் தீவில் சிங்கள மக்கள் மத்தியில் இந்நிலை காணப்படவில்லை. சிங்கள மொழி, பௌத்த மதம் இவற்றை முடிந்தவரை பேணிக்காத்துக் கொண்டனர். சிங்களவர் மத்தியில் அநாகரிக தர்மபால, பௌத்தபிக்குகள் ஆகியோர் சிங்களவரிடம் இன உணர்வை மொழி, மத உணர்வுகளைக் கட்டி வளர்ப்பதில் குறிப்பிடத்தக்க பணியாற்றினர். இவ்வகையில் அவர்களின் பணி முற்போக்கானதெனினும் இவர்கள் இனவாதிகளாய் இருந்தமை வருந்தத்தக்கதே.

## பிறேம்

இன்றைய சிங்கள ஆட்சியாளர் முதல் அன்றைய பௌத்த சிங்கள அரசர்கள்வரை இனவாதிகளாகவேயிருந்து வந்துள்ளனர் என்பதை இங்கு குறிப்பிடுதல் சிறப்பானதே. இன்று இலங்கையின் வரலாற்று நூலாகக் கருதப்படும் மகாவம்சத்தை எழுதிய மகாநாயக்க தேரர்கூட வரலாற்றைச் சரியான கண்ணோட்டத்தில் பார்க்காது, இனவாத அடிப்படையில் வரலாற்றை திரித்தார்.

தொல்லியல் ஆய்வுகளை மேற்கொண்டிருந்த பரணவிதான என்பவர் அண்மைக் காலத்தில் புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியராய் விளங்கினார். இவர்கள் யாவரும் திட்டமிடப்பட்ட முறையில் தீவில் தமிழரின் உண்மை வரலாற்றை இருட்டடிப்புச் செய்தார்கள். முடியாதவிடத்து திரிபுபடுத்தினார்கள். சிங்கள ஆசிரியர்கள் இனவாத நோக்குடனேயே மாணவர்கட்கு வரலாற்றைப் போதித்தார்கள். தமிழரை ஆக்கிரமிப்பாளர்கள் என்றே அடையாளங்காட்டினர்.

இத்தீவில் சிங்கள மக்களின் வருகைக்கு முதலே வளர்ந்திருந்த ஆதித் திராவிட கலாசாரத்தை முழுமையாய் இருட்டடிப்புச் செய்தனர். சிங்கள ஆட்சியாளர்கள், மதபீடம், வரலாற்றாய்வாளர்கள், ஆசிரியர்கள், பெரியார்கள் அனைவரும் ஒன்றுபட்டு நின்று இனவாதத்தை சிங்கள மக்களிடம் தூண்டிவிட்டனர்.

ஆனால் தமிழ்ப் புத்திஜீவிகள், ஆசான்கள் மற்றும் பிரமுகர்கள் தமிழ் மக்களிடம் தேசியவாதத்தைக் கட்டி வளர்ப்பதில் எதுவித அக்கறையும் காட்டவில்லை மாறாக திரிபுபடுத்தப்பட்ட, இனவாத அடிப்படையில் அமைந்த வரலாற்றுப் பாடநூல்களை எவ்வித தயக்கமுமின்றிப் போதித்தனர்.

விளைவு இன, மத, மொழி, தேசம் பற்றிய உணர்வுகள் தமிழர்களிடம் அற்றுப் போய்விட்டன. பதவிகள் மட்டுமே இலட்சியம் என்ற நிலையில் தமிழ் இளைஞர்கள் வரைத் தலைப்பட்டனர். கல்வி ஒரு முதலீடாகியது. உயர் கல்வியைப் பெற்று பல்கலைக் கழகம் சென்று பட்டம் பெற்று, பெற்ற பட்டத்தை விற்றுப் பிழைக்கும் கூட்டமாக தமிழ்ச் சமூகம் காணப்பட்டது. இத்தன்மையை மிகத் தெளிவாய் நடுத்தர வர்க்கத்தினரிடம் காணக்கூடியதாயுள்ளது.

உயர்கல்வியில் எங்கேனும் தடங்கல்கள் ஏற்பட்டதும் மேற்கைரோப்பிய நாடுகளில் தஞ்சமடைந்து வாழ முற்பட்டவர் மேற்படி நடுத்தர வர்க்க இளைஞர்கள். மறுபுறம் உழைக்கும் வர்க்க இளைஞர்கள் மிகப் பெருவாரியாய் போராட்டத்தினுள் உள்வாங்கப்பட்டனர். இழப்பதற்கு எதுவுமற்றவர்களே போராட்டத்தில் முற்போக்கான பாத்திரத்தை வகிப்பதனை இங்கு வெளிப்படையாய் காண முடிகிறது.

இன உணர்வற்றுத் தமிழினம் தான மட்டும் தப்பிக் கொள்ளும் வகையில் வாழ்வது மிகக் கேவலமானது மட்டுமல்ல இது மிக ஆபத்தான ஒரு வளர்ச்சியாகும். தமிழ்க் கல்விமான்கள் இத்தகைய வெட்கப்பட வேண்டிய நிலைக்கான பொறுப்பில் பங்கினை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அண்மையில் யாழ். மாவட்டப் பாடசாலை அதிபர்கள், கல்வியதிகாரிகள் மத்தியில் உரையாற்றும் பொழுது விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் திரு. மாத்தயா அவர்கள் பின் வருமாறு கூறினார்.

"சிங்களவர்களிடையே உள்ள இன உணர்வு தமிழர்களிடையே இன்று இல்லை. யாரோ போராட்டம் நடத்துகின்றான் எமக்கென்ன என்ற நிலையில் பலர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இந்த வெட்கக் கேடான நிலை மாற வேண்டும்- ஆசிரியர்கள் அதிபர்கள், கல்வியதிகாரிகள் முதல் சகல அரச ஊழியர்களும் தமது வேலை பறிபோய் விடும்; இடமாற்றம் வரும், பதவி உயர்வு நிறுத்தப்பட்டு விடும் என்ற நிலையில் போராட்டத்திற்கு தமது பங்களிப்பை வழங்கப் பின் நிற்கின்றார்கள்.

மேலும் அனைத்துத் தமிழரும் இன ஒடுக்குமுறைக்கெதிராக குரல் கொடுத்தேயாக வேண்டும்- தமிழினம் உரிமையுடன் வாழ அதிபர்கள், ஆசிரியர்களின் பங்கும் அவசியமானதென்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

நீண்ட பதினெட்டு ஆண்டுகள் சிறிலங்கா, இந்திய அரசுகட்கு எதிராக தொடர்ச்சியாய் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பிரதித் தலைவரின் கூற்றுக்களை நாம் ஆழமாக ஆய்வுசெய்வோமானால் மிகுந்த மன வேதனையுடனேயே அவர் தமிழ்ச் சமூகத்தைப் பார்க்கின்றார் என்பது வெளிவரும். உண்மையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு நாம் அனைவரும் எமது பங்களிப்பைச் செலுத்தியே ஆகவேண்டும். தமிழனாய்ப் பிறந்த ஒவ்வொருவனதும் தவிர்க்க முடியாத வரலாற்றுக் கடமையே இது.

அத்துடன் தமிழ் இன உணர்வு சிறார்களிலிருந்து படிப்படியாய் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். ஆசிரியர்களும், புத்திஜீவிகளும் இப்பணியை மிகத் திறம்படச் செய்து முடிக்க வேண்டும். எமக்கென சொந்த அரசில்லாத நிலையில் பட்டம், பதவிகளினால் எதுவிதப் பயனுமில்லை என்ற உண்மை சமூகத்திற்கு உணர்த்தப்பட வேண்டும். மூன்று நூற்றாண்டுக்கு முன்னர் இத்தீவில் நாம் இழந்த அரசை மீட்டெடுக்கும் புனிதப் போரில் நாம் அனைவரும் இணைந்து கொள்வோம்.

"அடக்கு முறைக்கெதிராக ஆயுதம் ஏந்தக் கற்றுக்கொள்ளாத எந்தவொரு தேசிய இனமும் அடிமை வாழ்விற்கே தகுதியானது"

தேவிபரமலிங்கத்தின் "உரங்களும் பசளைகளும்" சிறுகதையின் தொடர்ச்சி பக்கம் 7இல் வெளியாகியுள்ளது.



# நெஞ்சம் மறக்குமா...?

கண்ணாய் எமையணைத்து
காத்திருந்த எம் தலைவன்
எண்ணாது எமைப்பிரிந்து ஈராண்டு
மறக்குமா - நெஞ்சம் பொறுக்குமா...?
மாலைப் பொழுது எங்கள்
மன்னன் நிறுவனத்தில்
கோழைத்தனம் மிகுந்ததேசத் துரோகிகளினால்
இரத்தத்தில் தரை சாய்ந்த சோகத்தை
நெஞ்சம் மறக்குமா?



" ஆத்ம சாந்திக்கு
எம் அஞ்சலிகள் "

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
சாவகச்சேரி.



அமரர்
க. செல்லத்துரை அவர்கள்
(முன்னாள் அதிபர், மீசாலை விக்னேஸ்வரா ம. வி.)

அன்னை மண்ணில்: 1 . 6 . 1942
அநியாய அழிப்பில்: 12 . 4 . 1989

(R/ 1312)

# சக்தி சமநிலையை சீராக்க சீனாவால் முடியுமா?

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின் உலகில் நிலவி வந்த வலுச்சமநிலை இன்று இல்லை. இதன் காரணமாக மூன்றாம் உலக நாடுகளின் இறைமை பெரிதும் சர்ச்சைக்குரியவையாக மாறியுள்ளது, வலுச்சமநிலை பாதிக்கப்பட்டமையால் ஐ.நா. சபையும் தனது இலக்கில் இருந்து விலகிச் செல்வதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

எண்பதுகளின் ஆரம்பத்தில் சோவியத் குடியரசின் ஜனாதிபதி கொர்பசேவ் மேற்கொண்ட 'சீர்திருத்த நடவடிக்கைகளே' உலகச் சமநிலையைப் பாதித்து இன்றைய சமநிலையற்ற தன்மையை தோற்றுவித்தது எனலாம். சோவியத் அதிபரின் கொள்கை மாற்றம் உலகில் இருந்து கெடுபிடிப் போரை ஒழித்தாலும் வளைகுடாவில் பெரும் அழிவினை ஏற்படுத்திய பெரும் போர் ஒன்றிற்கு வித்திட்டதென்றால் மிகையாகாது.

இரண்டாம் உலகமகா யுத்தம் முடிவடைந்தபோது போரில் தோற்றதாக ஒரு அணி மட்டுமே இருந்தது ஆனால் போரில் வென்றதாக இரு வேறுபட்ட கோட்பாடுகளைக் கொண்ட இரு அணிகள் இருந்தன அதிலிருந்து முதலாளித்துவ அணியும், கம்யூனிச அணியும் உலகை இரு கூறாகப் பிரிப்பதில் போட்டியிட்டன இதன் விளைவே கெடுபிடி யுத்தமாக மாறியது. அத்தோடு அரசியல் ரீதியாக நெருக்கமானவர்களைக் கூட்டுச் சேர்ந்தவர்களுடன் இராணுவக் கூட்டுக்களையும் ஏற்படுத்திக் கொண்டனர். இவ்வாறு உருப்பெற்றவையே நேட்டோவும், வோர்சோவும். இவ் இரு அணிகளும் அணுவாயுத யுத்தத்தை அணு ஆயுதத்தைக் கொண்டே தடுத்து நிறுத்தினர் எனக் கொள்ளலாம். அதாவது இருவரிடம் இருந்த அணுவாயுதங்களே இவர்களுக்கிடையில் நேரடி மோதலைத் தடுத்து வந்ததெனலாம்.

ஆனால், சோவியத் ரூசியாவின் ஜனாதிபதியாக கொர்பசேவ் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் நிலைமையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. ஆயுதப் போட்டிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முயற்சிகள் தொடங்கப்பட்டன. சோவியத்தில் 'ஜனநாயக உரிமைகள்' பற்றிப் பேசப்பட்டது இராணுவக் கூட்டுகள் கலைக்கப்பட்டன. வோர்சோ அணியில் இருந்த நாடுகளில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் வலுவடைந்து ஆட்சியாளர்கள் விரட்டப்பட்டார்கள். சோவியத்து அமெரிக்காவுடனான போட்டியில் இருந்து விலகிக் கொண்டது.

இந்நிலையில் சோவியத் யூனியன் வளைகுடா நெருக்கடியின்போது அதிலிருந்து ஒதுங்கிக்கொண்டது இதன் காரணமாக உலகில் சமாதானத்தைப் பேணுவதற்காக உருவாக்கப்பட்ட ஐ.நா. சபை பெரும் அழிவை உண்டாக்கக் கூடிய போர் ஒன்றிற்கு அனுமதி வழங்கியதோடு அமெரிக்காவின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் சபையாகவும் மாறியது. உலகின் 'பாதுகாவலன்' என்ற பதவியை அமெரிக்கா தானாக எடுத்துக் கொண்டது.

இன் நிலையில் இன்று தனது தேவைகேற்றபடி ஐ.நா.வைப் பயன்படுத்துவதில் அமெரிக்கா வெற்றிகண்டுள்ளது இதன் காரணமாக ஐ.நா. அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டதாக குர்திஷ் இன மக்களின் விவகாரத்தில் ஒரு தீர்மானத்தை ஐ.நா. மேற்கொண்டது.



சீனப்பிரதம மந்திரி லீபெங்

இந் நிலையானது முதலாம் உலக மகாயுத்தத்தின் முடிவில் இருந்த நிலையை ஒத்ததாகும். முதலாம் உலக மகாயுத்தத்தில் வெற்றி பெற்ற ஒரு அணியும், தோல்வியடைந்த ஒரு அணியுமே இருந்தன. இந்நிலையில் சமாதானத்தைப் பேணுவதற்காக அமைக்கப்பட்ட சர்வதேச சங்கம் எனும் அமைப்பும் வெற்றி பெற்றவர்களின் விருப்பத்திற்கேற்ப நடந்து கொண்டது. இதன் காரணமாகவே இருபது வருட இடைவெளிக்குள் இரண்டாம் உலக மகா யுத்தம் தோன்றியது. இந்த சக்தி சம நிலை இன்மையே காரணமாகும்.

இதே போன்று இன்று உருவாகிய சக்தி சம நிலை அற்ற தன்மையே வளைகுடா போருக்கும் வித்திட்டது.

இச்சமநிலை இன்மை தொடரும் வரை உலகின் மேற்கின் செல்வாக்கு கட்டுப்பாடு அற்றதாக தமது விருப்பத்திற்கு ஏற்ற செயற்பாடு கொண்டதாக இருக்கும், இதன் காரணமாக மூன்றாம் உலக நாடுகள் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகக்கூடிய நிலை ஒன்று உருவாகக்கூடும். பல போர்களும் நடைபெறக்கூடும்.

இந்நிலையை சீனா தெளிவாக உணர்ந்துள்ளது: ஆகையினால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம் இவ் எண்ணம் சீனாவின் மனத்தில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த வாரம் ஜப்பான் நாட்டுத் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றிற்குப் பேட்டி அளித்த சீனப்பிரதமர் லீபெங் வளைகுடா யுத்தத்தின் போது அமெரிக்காவிற்கும் சோவியத் யூனியனுக்கும் இடையில் ஏற்பட்ட நல்லிணக்கம் உலகச் சமநிலையைக் குலைத்து விட்டதென்றார். மேலும் அவர் குறிப்பிடுகையில் சீனா வல்லரசுகளுடன் இணைந்து கொள்ளாமல் சுதந்திரமாக அதன் சமாதானக் கொள்கையைத் தொடர்ந்தும் பின்பற்றும் என்றும் மூன்றாம் உலக நாடுகளுக்கு எதிராக மொஸ்கோவுடன் சீனா கூட்டுச் சேராது எனவும் அவர் தெரிவித்தார்.

சீனப்பிரதமரின் இக்கூற்றானது இன்றைய சீனாவின் நிலையைத் தெளிவாக காட்டுவதோடு மூன்றாம் உலகத்தின் தலைமையை தனது கட்டுப்பாட்டினுள் கொண்டு வருவதற்கான அதன் எண்ணத்தையும் வெளிக்காட்டுவதாக உள்ளது.

சீனாவின் இம்முயற்சியானது ரஷ்யாவின் வெற்றிடத்தை இட்டு நிரப்புமா என்பது கேள்விக்குறியாக இருப்பினும் சீனாவினால் அது நடைமுறையாக முடியாது என ஒதுக்கித் தள்ளிவிட முடியாது.

சீனா உலகில் கூடுதலான சனத்தொகையையும் பெரியளவிலான பரப்பையும் கொண்டுள்ள நாடு. குறிப்பிடக்கூடிய வளத்தையும் கொண்டுள்ளது அத்தோடு சீனாவில் வாழும் மக்களில் பெரும்பாலானவர்கள் ஒரே இனத்தைச் சார்ந்தவர்களாவர் இதன் காரணமாக சோவியத் யூனியனில் உள்ளது போன்று தேசிய இனங்களின் பிரச்சினை சீனாவில் இடையாது.

மேலும் கிழக்கு ஐரோப்பாவிலும் சோவியத் யூனியனிலும் ஏற்பட்டது போன்ற ஜனநாயகக் கோரிக்கைகளுக்கான கிளர்ச்சியையும் 'இரும்புக் கரம்' கொண்டு சீனா அடக்கிவிட்டது. இந்நிலையில், மூன்றாம் உலகத் தலைமையைச் சீனா எடுக்க முன் வருவதில் பெரும் சிரமம் ஏதும் ஏற்படப்போவதில்லை.



சோவியத் ஜனாதிபதி
கொர்பச்சேவ்

மறுவளமாக மேற்குலகத்திற்கு எதிரான போக்குடைய மூன்றாம் உலக நாடுகளும் சோவியத் யூனியனால் கைவிடப்பட்ட மூன்றாம் உலகநாடுகளும் இன்று பாதுகாப்பு வழங்கக் கூடிய ஒரு தலைமை தேவையாயுள்ளது. இந்த நிலையில் சீனா அதற்கு தயாராக இருக்கும் பட்சத்தில் சீனா பக்கம் நாடுகள் சாய்வது தவிர்க்க முடியாததாகவும் அமையக்கூடும்.

மேலும் மூன்றாம் உலகநாடுகள் பெரும்பாலானவை இன்று ஏதோ ஒரு வகையில் நெருக்கடியில் சிக்கியுள்ளன. இவற்றில் முக்கியமானவை தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களாகும். இந்நிலையில் இந்த நாட்டு அரசாங்கங்களுக்குத் தேவையான ஆயுதங்களை மலிவு விற்பனை செய்யவும் சீனா இன்று முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளமையால் சீனாவிற்கும் அந்நாடுகளுக்குமிடையில் உறவு நிலையில் நெருக்கம் ஏற்படுவதில் சிரமம் எதுவும் ஏற்படப்போவதில்லை.

இந்த நிலையில் மூன்றாம் உலகின் தலைமையை சீனா வழங்குவதற்கு தடைக்கல்லாக இருக்கக் கூடியவை அதன் பொருளாதார தொழில்நுட்ப முகாமைத்துவ ரீதியில் அதன் பின்தங்கிய நிலையே ஆகும். ஏனைய மூன்றாம் உலக நாடுகளை விடவும் பிராந்திய வல்லரசுகளை விடவும் சீனா இவற்றில் வளர்ச்சிபெற்றிருப்பினும் மேற்குலகத்துடனோ அல்லது அண்டை நாடான ஜப்பானுடனோ ஒப்பிடும் இடத்து அதன் வளர்ச்சி மிகவும் குறைவானதாகவே உள்ளது.

வளர்ச்சி பெற்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு அண்மையில் இருந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளினாலும் சோவியத் யூனியனாலுமே எழுபது வருடத்தில் அதனை நிவர்த்தி செய்ய முடியவில்லை. இதன் காரணமாகவே இன்று அந்த நாடுகளுக்கு இந்த நிலைமை ஏற்பட்டது. இந்த நிலையில் மூடப்பட்ட நிலையிலுள்ள சீனாவினால் இதனை எதிர்த்து வெற்றி கொள்வது சற்றுச் சிரமமான காரியமாகவே இருக்கும்.

மேற்கத்தைய - ஜப்பானிய தொழில்நுட்ப உதவியும், முகாமைத்துவமும் சீனா பெற்றுக்கொள்வதானால் இன்றைய கடினப் போக்கில் இருந்து உள்நாட்டில் ஜனநாயக உரிமைகளுக்கு விட்டுக் கொடுப்புக்களைச் செய்ய வேண்டி வரும். ஆனால் அவ்வாறான விட்டுக்கொடுப்புகள் சீனாவில் பிரச்சினைகள் பலவற்றை உருவாக்குவதற்கே வாய்ப்பைத் தோற்றுவிக்கக் கூடியதாக இருக்கும். ஏனெனில் கடந்தகால ஏனைய நாடுகளின் வரலாறுகள் அவற்றையே காட்டுகின்றன. சோவியத் யூனியனில் கடந்த எழுபது வருடங்களாக மூடப்பட்ட நிலையில் இருந்த கதவு திறக்கப்பட்டபோது சோவியத் யூனியன் ஒரு குழப்பத்தின் வடிவமாகவே உலகிற்கு வெளிவந்தது / தெரியவந்தது.

இதனை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது உலகின் கூடுதலான சனத்தொகையைக் (115 கோடி) கொண்டுள்ள நாடான சீனாவின் நிலைமை எவ்வாறு இருக்கும் என தற்பொழுது மதிப்பிடமுடியாது.

ஆனால் இன்று உலகில் உள்ள சக்தி சமநிலையற்ற தன்மை நீக்கப்பட வேண்டுமானால் சீனா தான் அதற்கு தலைமை தாங்க முடியும். அதேவேளை சீனாவினால் அது முடியுமா என்பதனை சீனாவின் உள் விவகாரங்களே தீர்மானிக்க முடியும்.

. ஜெயா

---

**உறவுகளுக்கு:.**

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஓரிரு மாதங்களுக்கு முன்னதாக எழுதி இருந்த கடிதம் அது.

கம்பனி ஒன்றில் இலங்கைக் காசில் இருபத்தையாயிரம் ரூபா சம்பளத்தில் வேலை கிடைத்திருப்பதாகவும் கடிதத்தில் சுந்தரம்பிள்ளையரின் மகன் சேகரன் தகவல் தெரிவித்து இருந்தான்.

கடிதத்தைப் பார்த்த அவருக்கு நிம்மதிப் பெருமூச்சு அப்பொழுதே வந்திருந்தது.

பட்டிருந்த கடன்களை வட்டியோடு இரண்டொரு மாதத்தில் தீர்த்து விடலாமென்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்த அவர்பாடு உண்மையாகிவிட்டது.

கடந்த ஐந்து மாதங்களுக்குப் பின்பாக வட்டியும், குட்டியுமாக நீலவான் கடிதங்கள் கைகளில் நிறையக் கிடைத்ததும் அவரது மனமும் கனவால் நிறைந்துவிட்டது.

''செல்லம் மகன் இதுல காசனுப்பி இருப்பான்... வட்டியும் முதலுமா எழுபத்தைஞ்சு வரும்... முருகுப்பிள்ளையரின் கடனைத் தூக்கி எறிஞ்சிட்டால் செல்லச் சீவியந்தான்...''

செல்லம்மாளும் கணவரின் கற்பனைகளுடன் மகனைக் கனவுகண்டாள்.

சில உறைகளில் முன்னரைப் போலவே புகைப்படங்கள் இருந்தன.

காசை எதிர்பார்த்திருக்கும் சுந்தரம்பிள்ளையரின் நோட்டம் 'போட்டோக்கிறாப்' அல்ல வங்கி 'றாப்' தான். அந்த உறைகள் மனைவியின் கைகளுக்கு மாறுகின்றன

— ஒரு உறையைப் பிரித்து இருந்த கடிதத்தைப் படித்தார்.

''ஐயா''

உங்கள் மகன் சேகரன் அக்டோபர் மாதம் நடந்த விபத்தில் சிக்கி இறந்துபோனார்...''

''செல்லம் அதென்னடி எழுதிக்கிடக்கு'' கடிதம் கையில் இருந்து நழுவ பிள்ளையரின் உடல் கதிரையில் சாய்கிறது.

வண்ணப் படங்களில் மகனின் புதிய தேஜஸ்ஸைப் பார்த்துப் பூரித்துக்கொண்டிருந்த செல்லம்மாள் கணவனின் நிலையைப் பார்த்து திடுக்குற்றுப் போனாள்

''என்ன... என்னணை நடந்தது...''

''கடிதத்தை எடுத்துப் படி....'' பிள்ளையர் கீழ்க்குரலில் சொல்ல அம்மாள் நழுவிப் போன கடிதத்தை எடுத்து வாசித்தாள்.

முதல் பந்தியைப் படித்த செல்லம்மாளுக்கும் மூளையில் மின்னல் தாக்கியது. தொடர்ந்த வாசகங்களில்...

''...அந்த நாட்களில் இலங்கையில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்ததால் உங்களுடன் தொடர்புகொள்ள முடியவில்லை. சடலத்தை அனுப்பி வைக்கும் முயற்சியும் மேற்கொள்ள முடியாமல் இங்கேயே...''

கடிதத்தைப் படித்த செல்லம்மாளின் 'பெத்த' வயிறு நெருப்பு இல்லாமலே வெந்து கொண்டிருந்தது:

''கடைசீல உன்ரை முகத்தைக் கூடக் காணக் குடுத்து வைக்கேல்லையே ராசா...''

சுந்தரம்பிள்ளையரின் இழப்பில் பங்கெடுக்க அந்த ஊரில் எவருமே இருக்கவில்லை. அவருக்கு இழப்புகள் இருவழியில் வருமென்று ஆர்தான் எதிர்பார்த்தார்கள்?

''இந்த மண் எங்களின் சொந்தமண்...''

ஒலிபெருக்கி பூட்டிய வாகனத்தில் இருந்து விடுதலை கீதம் அந்த ஊரையே விழிப்படையச் செய்து கொண்டிருந்தது.

''அன்பான தமிழீழ மக்களே! எமது பிரதேசப் பொறுப்பாளர் ஆறுமுகம் பிரதீபன் தலைமையில் இன்று மாலை மாவீரர் இறுதிநாள் நிகழ்ச்சிகள் லெப். கேணல் திலீபன் சனசமூக நிலையக் கலை அரங்கில் நடைபெறும். இந்தவைபவத்தில் மாவீரர்களின் பெற்றோர்களை தலைவர் சந்தித்துக் கௌரவிக்க இருக்கிறார்.'

எழுச்சிக் கீதத்தைத் தொடர்ந்து அறிவிப்பான வாசகங்கள் பிள்ளையரின் காதுகளிலும் விழுந்தன.

பணத்திற்காக மகனை அந்நிய மண்ணுக்கு அனுப்பி அந்த மண்ணுக்கே பசளை ஆக்கிய தன்னையும், சொந்த மண்ணில் அந்நியரின் ஆக்கிரமிப்பு விலங்கொடிக்க தன்னையே உரமாக்கிக் கொண்ட தபோதரனையும் - அந்தவழியில் மண் மீட்சிக்கு அணி திரண்டுள்ள பாசறையில் தன்னை இணைத்துக் கொண்டுள்ள பிரதீபனையும் - தந்தை ஆறுமுகத்தையும், சுந்தரம்பிள்ளையரின் இதயம் தராசாகி நிறுத்துப் பார்த்தது.

''எங்களுக்கு ஏற்பட்ட இந்த அனுபவம் இனி இம் மண்ணில் எந்தப் பெற்றோருக்கும் வரக்கூடாது....''

கெட்டபின்புதான் ஞானம் பிறக்கும் என்பதுபோல் சுந்தரம்பிள்ளையருக்கு காலம் கடந்து பிறந்துள்ள புத்தியைச் செயலாக்க இன்னொரு மகனா இருக்கிறான்?

விழுதுகள்

(தொடர்ச்சி 2 ஆம் பக்கம்)

# மருதனாமடக் கல்விக் கோட்டத்தில் இரு பாடசாலைக்கு ஓர் அதிபர்

(நல்லூர்)

இரு பாடசாலைகளுக்கு ஒருவரே அதிபராயிருக்கும் விந்தை யாழ் கல்வித்திணைக்கள நிர்வாக எல்லைக்குள் மருதனாமடம் கல்விக்கோட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

யாழ் கல்விப் பணிப்பாளரின் சொந்தக் கிராமமாகிய இணுவிலிலுள்ள சைவமகாஜன வித்தியாலயத்திற்கும், அமெரிக்கன்மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலைக்கும் பணிப்பாளரின் மிக நெருக்கமான ஆலோசனைக்காக உத்தியோகப்பற்றற்ற முறையில் கடமைபுரியும் ஒரு தொழிற்சங்கப் பிரமுகரே இவ்வாறு அதிபராகக் கடமையாற்றுபவராகும். மேற்படி இரு பாடசாலைகளும் ஒன்றாக இணைத்து அவரையே அங்கு அதிபராக வைத்திருக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறதாம்.

மேற்படி பாடசாலைகளில் ஒன்றான மகாஜன வித்தியாலயத்துக்கு அண்மையில் முதலாம்தர அதிபர் பதவி உயர்வு பெற்ற ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தும், அவர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்குத் தற்காலிக விரிவுரையாளராகக் கல்விப் பணிப்பாளரின் தற்துணிபதிகாரம் மூலம் இடமாற்றம் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அண்மையில் பலாலி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளில் ஏற்பட்ட விரிவுரையாளர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு தற்காலிக விரிவுரையாளர்களாக பலர் யாழ். கல்வித் திணைக்களத்தால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். விளம்பரப்படுத்தலோ, நேர்முகத் தேர்வோ இன்றிப் பல்வேறு சுற்றுநெறிக்குப் பலர் விரிவுரையாளர்களாகத் தெரிவாயிருப்பது ஆசிரிய வட்டாரங்களில் பெருங் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

தற்காலிக விரிவுரையாளர்களாகக் கடமையாற்றுபவர்கள் எதிர்காலத்தில் தமக்கு நிரந்தரப்பதவி கோரும் எண்ணத்தில் பரீட்சைக்கு முகம் கொடுக்காது கல்வி நிர்வாக சேவைக்குள் சேருவதற்கு வாய்ப்புத்தேடியே இவ்வாறு பின்கதவால் செல்கின்றனர்.

நேர்முகப்பரீட்சையோ, அல்லது நம்பகரமான வேறு வழிமுறைகள் மூலமோ பொதுத் தெரிவு நடந்தால், தாமும் தகைமையை நிரூபித்து இச்சேவைக்குள் புகுந்திருக்க முடியுமெனத் தகுதி வாய்ந்த பல ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர். (85)

## இன்று வடுமுறை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள பெரும்பாலான கோட்டப் பாடசாலைகள் இன்று முதலாம் தவணைக்காக மூடப்படுகின்றன. இவை மீண்டும் இரண்டாம் தவணைக்காக வைகாசி மாதம் 13ஆம் திகதி திறக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சில பாடசாலைகள் கடந்த 5ஆம் திகதியே முதலாம் தவணை விடுமுறைக்காக மூடப்பட்டுள்ளன. இவை மீண்டும் வைகாசிமாதம் 6ஆம் திகதி இரண்டாம் தவணைக்காக ஆரம்பிக்கப்படவுள்ளன.

சில கோட்டப் பாடசாலைகள் எதிர்வரும் 18ஆம் திகதி மே முலம் தவணை விடுமுறைக்காக மூடப்படவுள்ளன. க. பொ. த உயர்தரப் பரீட்சைகள் நடைபெறவுள்ள பாடசாலைகள் பரீட்சை முடிந்தபின்னரே ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## பொதுமுகாமையாளர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர்களுக்கான பொதுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பகல் 2.00 மணிக்கு யாழ். பலநோக்கு கூட்டுறவு சமாசட்ட மேல்மாடியில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் முக்கியமான சில முடிவுகள் எடுக்க வேண்டியுள்ளதால் சகல ப.நோ.கூ.சங்க பொது முகாமையாளர்களையும் தவறாது சமுகம் கொடுக்கும்படி யாழ் மாவட்ட கூட்டுறவுப் பகுதியினர் கேட்டுக் கொள்கின்றனர்.

## கொப்பிகளை கையேற்க அதிபர்கள் மறுப்பு

(நல்லூர்)

யாழ்: கல்வித்திணைக்களத்தினால் யாழ். பாடசாலை மாணவர்களுக்கு விற்பனை செய்யப்படுவதற்கென வழங்கப்பட்ட அப்பியாசக் கொப்பிகளை சில பாடசாலை அதிபர்கள் கையேற்க மறுத்துள்ளனர். கொப்பிகளின் விலைஅதிகமாக இருப்பதே இதற்கான காரணமாகும். 80 ஒற்றைக் கொப்பி வெளியில் ரூபா 6/25 விற்பனையாக இவை ரூபா 7-50 விற்கும்படி பணிக்கப்பட்டுள்ளது. பள்ளிக்கூடங்களில் மேலதிக விலை கொடுத்து கொப்பிகளை வாங்க மாணவர்கள் முன்வருகிறார்கள் இல்லை என அதிபர்கள் தரப்பில் கூறப்படுகிறது.

## எர்ஷாத்தை சிறைக்கு மாற்ற பங்களாதேஷில் விவாதம்

(டாக்கா)

பங்களாதேஷ் முன்னாள் அதிபர் எர்ஷாத் அவர்களை மத்திய சிறைச்சாலைக்கு மாற்றுவதற்கு பிரதமர் பேகம் காலிதா ஸியா பாராளுமன்றத்தின் ஒப்புதலை நேற்றுக் கோரியுள்ளார்.

ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் போன்ற குற்றச்சாட்டுக்களின் பேரில் தனிப்பட்ட வீடொன்றில் பலத்த காவலில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் திரு. எர்ஷாத் மத்திய சிறைச்சாலைக்கு மாற்றப்படவேண்டிய அவசியத்தை வலியுறுத்தி பிரதமர் பேகம் காலிதா ஸியா பாராளுமன்றத்தில் பேசினார். நான்கு மணிநேரம் நடந்த விவாதத்தில் சபையில் ஒரே கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டதாகவும் தெரிகிறது.

## 12 பேர் பலி; 150 பேர் இடிபாட்டில்

(டாக்கா)

பங்களாதேஷின் தலைநகரான டாக்காவில் நேற்று முந்தினம் புயலினால் பாதிக்கப்பட்டு தொழிற்சாலை ஒன்றின்கூரை விழுந்ததில் குறைந்தது 12 பேர் உயிரிழந்ததாகவும், 150 பேர் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

*சிறிலங்கா*

விளையாட்டுத்துறை அமைச்சு பிரகடனப்படுத்தியுள்ளது தேசிய விளையாட்டை நிர்ணயிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் சிபாரிசுகளை அடுத்து கரப்பந்தாட்டம் தேசிய விளையாட்டாக பிரகடனப்படுத்தப்பட்டது என அந்த அமைச்சு அறிவித்தது.

*ஈராக் ராணுவம்*

இந்தச் செய்தி அமெரிக்காவிலுள்ள ஈராக் தூதுவருடாகவும், ஐ. நா. மூலமும் அறிவிக்கப்பட்டுள்ளது. நிவாரணப்பணிகளுக்கு ஈராக் இடையூறாக இருக்காது என ஈராக் தூதுவரிலுள்ள தூதுவர் மூலம் அறிவித்துள்ளது.

மூன்று இலட்சம் அகதிகளுக்கு முப்பது நாட்களுக்கு தேவையான உணவுப்பொருள்கள் அனுப்பப்பட்டிருப்பதாக அமெரிக்கா கூறியுள்ளது.

*ஐ. நா.*

இவரே அமைதிகாக்கும் படைக்கும் தலைவராக விளங்குவார்.

அத்துடன் 1400 பேர்களைக் கொண்ட இந்த அமைதி காக்கும்படையில் 27 நாடுகளின் உறுப்பினர்களும், ஐ. நா. பாதுகாப்புச்சபையின் ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளும் அங்கம் வகிப்பார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

*சாந்தை*

இராணுவத்திற்கு பலத்த இழப்பு ஏற்பட்டதற்கான சாத்தியக்கூறுகள் தென்பட்ட போதிலும் சேதவிபரம் எதுவும் தெரியவரவில்லை. புலிகள் தரப்பில் மூவர் வீரமரணம் அடைந்துள்ளனர்.

இச்சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்த அதேசமயம் நாவாந்துறையில் நின்ற இராணுவத்தினர் முருகன் பகுதியை நோக்கி முன்னேற முற்பட்டபோது ஆண்டார்செட்டி எனும் இடத்தில் வைத்து விடுதலைப் புலிகள் கடுமையான தாக்குதலைத் தொடுத்தனர். இச்சண்டையிலும் இராணுவத்திற்கு ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை.

*இடம்பெயர்ந்தோர்*

யா/251, பளை மேற்கு யா/256, பளைவடக்கு யா/254, கட்டுவன் மேற்கு யா/239 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

மாதாந்த நிவாரணம் பெறுபவர்கள் இந்த நிவாரணம் பெறும் தகுதியற்றவர்கள் என்றும் நிவாரணம் பெறுவதற்கு தகுதியுடையவர்கள் அங்கீட்டு அட்டைகளுடன் வந்து உறுதிப்படுத்த வேண்டும் என்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கேட்டுள்ளது.


*ஜான ஓயாவிற்கு*

நடமாடும் ஜனாதிபதி செயலகத்தில் பாசன வசதிகள் பற்றி பொதுமக்கள் தெரிவித்தமுறைப் பாட்டையடுத்து, எந்த இடத்தில் அணைக்கட்டு அமைக்கப்படலாம் என்பது பற்றியும், தேவையான நிதி பற்றியும் பூர்வாங்க தகவல்களைச் சேகரிக்கும்படி ஜனாதிபதி காணி நீர்ப்பாசன இலாகா அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

*மலைவியர்*

நிறுவியுள்ளனர்.

வடக்கு பங்களாதேஷில் ரம்பூர் என்ற இடத்தில் பேரணியொன்றை நடத்திய இவர்கள் மாவட்ட அதிகாரிகளிடம் பதினொன்கு அம்சங்கள் அடங்கிய கோரிக்கைகளையும் கையளித்துள்ளனர். கணவன்மாருக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டறிய விசாரணைக் குழு அமைக்கவும் கோரியுள்ளனர்.




## மூடுபனியில் சிக்கிய கப்பல்கள் மோதி பலர் பலி

(இத்தாலி)

அடர்த்தியான மூடுபனியில் சிக்கிக் கொண்ட கப்பலும், எண்ணெய் தாங்கிக் கப்பலும் நேற்று இத்தாலிக் கடலில் மோதிக் கொண்டன. இந்த விபத்தில் எழுந்த தீப்பொறிகளால் எண்ணெய் தாங்கிக் கப்பல் தீப்பிடித்தது. இதனால் கப்பலில் இருந்த பயணிகளுக்கு தப்பித்துக் வெளியேறும் வாய்ப்பை இழந்தனர். சுமார் குறுமணிநேரத் தீவிரத் தேடுதலின் பின் ஒருவர் மட்டுமே உயிருடன் மீட்கப்பட்டார். எண்ணெய் தாங்கிக் கப்பலில் இருந்த இருபத்தெட்டுப்பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

## மரணமடைந்த கூட்டுறவு பணியாளர் குடும்பங்களுக்கு இழப்பீடு இன்னும் இல்லை

(யாழ்ப்பாணம்)

இந்திய இராணுவத்தின் தாக்குதல்களில் உயிரிழந்த கூட்டுறவு பணியாளர்களுக்கு நஷ்டஈடு கோரி மாகாண அரசிடம் விண்ணப்பித்திருந்தோர்: எந்த ஒரு பதிலும் கிடைக்காததால் கடந்த மூன்று வருடங்களாக இந்தப் பணியாளரின் விதவை மனைவியும் பிள்ளைகளும் பெரும் கஷ்டநிலையை அனுபவித்து வருகின்றனர் என யாழ். கூட்டுறவுத் திணைக்கள ஆணையாளர் கவலை தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து வடக்கு கிழக்கு மாகாணசபை அசட்டைத்தனமாக இருப்பது குறித்தும் அவர் கவலை தெரிவித்துள்ளார். (வே)

## பஞ்சாப்பில் தேர்தல் நடத்த மத்திய அரசு பரிந்துரை

(டில்லி)

அஸாம், பஞ்சாப் மாநிலங்களில் தேர்தல்களை நடாத்துமாறு மத்திய அரசு தேர்தல் ஆணைக்குழுவுக்குப் பரிந்துரைத்துள்ளது. இவ்விரு மாநிலங்களிலும் லோக்சபைக்கான தேர்தலையும், சட்டப் பேரவைத் தேர்தலையும் நடாத்துமாறு உள்துறை அமைச்சு தேர்தல் ஆணைக்குழுவைக் கடிதமூலம் கேட்டுள்ளது. இதேவேளை அஸாம், பஞ்சாப், காஷ்மீர் பகுதிகளில் தேர்தல் நடாத்த தகுந்த சூழ்நிலை இல்லை என காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார்.

## முப்பது தளங்களை மூடிவிட அமெரிக்கா முடிவு

(நியூயோர்க்)

அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களம் உலகெங்கும் இருக்கும் முப்பதிற்கும் அதிகமான தளங்களை மூடிவிட அல்லது குருப்புக்களைக் குறைக்க தீர்மானம் செய்துள்ளது. இது தொடர்பாக இன்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டிக்செனி அறிவிப்பு ஒன்றை விடுப்பாரென நியூயோர்க் இல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இராணுவத் தளங்கள் மூடப்படுவதால் வேலை இன்மை அதிகரிக்கும் என்பதால் அமெரிக்காவில் கடும் எதிர்ப்பு கிளம்புமென எதிர்பார்க்கப்படுகிறது.

*சட்டசபைத்*

றும் அதே அடிப்படையிலேயே தான் இப்பொழுதும் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது என்றும் வேலிவ் ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கருணாநிதி மேலும் தெரிவித்தார்.

தேர்தல் ஆணைக்குழு உத்தியோக பூர்வமாகத் தேர்தல் நாளை அறிவித்த பின் தேர்தல் அறிக்கையில் வேட்பாளர் பட்டியல் அறிவிப்பதற்கான நாள் வெளியிடப்படும் என்றும் கருணாநிதி கூறியுள்ளார்.

## டாக்டர் சாமுவேல் 136 வது பிறந்ததினம்

(யாழ்ப்பாணம்)

ஹோமியோபதி வைத்தியத்தின் தந்தை டாக்டர் சாமுவேல் ஹனிமன் அவர்களுடைய 136ஆவது பிறந்ததினம் தமிழீழ ஹோமியோபதி வைத்திய கல்லூரி வைத்திய மாணவர்களால் சாமி மெடிக்கல் அக்கடமி விரிவுரை மண்டபத்தில் கடந்த புதன்கிழமை வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது